வேளாண்மைத் துறை

# மக்கள் சாசனம்

©
தமிழ்நாடு அரசு
2010

# மக்கள் சாசனம்

## பொருளடக்கம்


| வ. எண் | துறை விவரம் | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | வேளாண்மை | 1 |
| 2. | தோட்டக்கலை | 35 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் | 48 |
| 4. | விதைச்சான்றளிப்பு | 64 |
| 5. | வேளாண் விற்பனை மற்றும் வணிகம் | 73 |
| 6. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் | 82 |
| 7. | நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை | 96 |

# மக்கள் சாசனம்

## முன்னுரை

பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரம் வேளாண்மையை சார்ந்துள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவையான அளவிற்கு வேளாண்மை உற்பத்தியை பெருக்கவும், விரிவான, ஆக்கபூர்வமான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த உப தொழில்களை ஊக்குவித்தல், மதிப்பு கூட்டுதல், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், விளைபொருள் விற்பனை, ஏற்றுமதி வாய்ப்பை பெருக்குதல் ஆகியவற்றில் அரசு பெருமளவு கவனம் செலுத்தி வருகிறது. வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க உதவிடும் வகையிலும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தி பெருக, உயரிய தொழில்நுட்பங்களான செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணைய திட்டம், ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கியும், விவசாயிகளுக்குத் தேவையான தரமான இபொருட்கள் மற்றும் கடனுதவிகள் உரிய காலத்தில் கிடைக்க செய்யவும், இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கவும் அரசு முயற்சிகள் எடுத்து வருகிறது.

தரமான விதைகள், நுண்ணூட்ட உரங்கள், பண்ணை இயந்திரங்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள், சொட்டுநீர் பாசனக் கருவிகள், இதர இடுபொருட்கள் மற்றும் உதவிகள் பல்வேறு திட்டங்களின் மூலமாக விவசாயிகளுக்கு மானிய விலையில் இவ்வரசு வழங்கி வருகிறது.

வேளாண்மையை அதிக வருவாய் ஈட்டும் தொழிலாக மாற்ற, தொழிற்சாலைகளுக்கு இணையாக வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கும் பல்வேறு சலுகைகள் அளிக்க தொழிற்கொள்கையில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் விவரங்களையும், அரசின் உதவிகளையும் விவசாயிகள் அறிந்துகொண்டு, அதன் பலன்களை பெற்று, உற்பத்தியை பெருக்கி வாழ்வில் வளம்பெற உதவும் வகையில் “**மக்கள் சாசனம்**” ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. இவ்விபரங்கள் www.tn.gov.in அரசு வலைதளத்திலும் இடம் பெற்றுள்ளன. வேளாண் பெருமக்கள் திட்ட பலன்களை முழுமையாக பெற்று, வேளாண்மை உற்பத்தியை பெருக்கி, வாழ்வில் வளம் பெற கேட்டுக்கொள்கிறேன்.

**வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**
வேளாண்மைத் துறை அமைச்சர்.

# 1. வேளாண்மை

## வேளாண்மைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

| **I. தரமான விதை உற்பத்திக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
|---|---|---|
| **நலத்திட்டங்களின் இனங்களும்,. பயன்களும்** | **தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்** |
| **அ) நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்கள் பயிர்களுக்கான விதைப் பெருக்குத் திட்டம்.** | | |
| விவசாயிகளை ஊக்கப்படுத்த, தரமான விதை உற்பத்தி செய்வதற்காக, அவர்கள் உற்பத்தி செய்யும் அனைத்து விதைகளுக்கும் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை கொள்முதல் விலையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | தரமான விதைகள் உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு ஒப்பந்தப்படி வழங்குவதற்கு அனைத்து விருப்பமுள்ள விவசாயிகளும் தகுதியானவர்கள்.<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. பண்ணை மகளிர் விவசாயிகளுக்கும், விவசாய ஆர்வலர் குழுக்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.<br><br>விதைப்பண்ணை விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வேளாண்மை துறையில் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலையில், வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகிக்கப்படும்.<br><br>விநியோகிக்கப்படும் விதைகளுக்கு விதைச்சான்றளிப்புத் துறையினால் வழங்கப்படும் சான்றட்டை பொருத்தப்பட்டிருக்கும். | <u>**கிராம அளவில்**</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>**வட்டார அளவில்**</u><br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>**மாவட்ட அளவில்**</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **நெல்**<br>ஊக்கத் தொகை<br>சான்று விதை உற்பத்திக்கு ***ஒரு கிலோ விதைக்கு ரூ.2/–*** | | |
| **சிறுதானியங்கள்**<br>ஊக்கத் தொகை<br>சான்றுவிதை உற்பத்திக்கு<br>***ஒரு கிலோ விதைக்கு ரூ.2/–*** | | |
| <u>**பயறுவகைகள்**</u><br><br>ஊக்கத் தொகை<br>ஆதார விதை உற்பத்திக்கு<br>***ஒரு கிலோவிற்கு ரூ.2/–***<br><br>சான்று மற்றும் உண்மை நிலை விதை உற்பத்திக்கு<br>***ஒரு கிலோவிற்கு ரூ.1/–*** | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| <u>நிலக்கடலை</u><br><br>ஊக்கத் தொகை<br>ஆதார விதை உற்பத்திக்கு<br>***ஒரு கிலோவிற்கு ரூ.3/—***<br><br>***சான்று விதை*** உற்பத்திக்கு<br>***ஒரு கிலோவிற்கு ரூ.2/—***<br><br>உண்மைநிலை விதை உற்பத்திக்கு ***ஒரு கிலோவிற்கு ரூ.1/—***<br><u>**எள்**</u><br>**ஆதார விதை** – உற்பத்திக்கு *உள்ளூர் அங்காடி விலையில்* ***கிலோவிற்கு 7.5 சதம் கூடுதல்***<br><br>**சான்று விதை –** உற்பத்திக்கு *உள்ளூர் அங்காடி விலையில்* ***கிலோவிற்கு 5 சதம் கூடுதல்***<br><br><u>**சூரியகாந்தி**</u> **– ஆதார விதை –** உற்பத்திக்கு *உள்ளூர் அங்காடி விலையில்* ***கிலோவிற்கு 7.5 சதம் கூடுதல்***<br><br>**சான்று விதை –** உற்பத்திக்கு *உள்ளூர் அங்காடி விலையில்* ***கிலோவிற்கு 5 சதம் கூடுதல்*** | விதையில் தர நிர்ணயத்தினை பராமரிப்பதற்காக வயல் மட்ட அலுவலர்கள், விதைச்சான்று அலுவலர்கள் அளிக்கும் வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்றுதல் வேண்டும்.<br><br>வட்டார அளவில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர்கள் (விதை உற்பத்தியாளர்கள்) நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி விதைப் பண்ணைகளை விதைச்சான்று துறையில் பதிவு செய்தல் வேண்டும்.<br><br>பயிர்காலத்தில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை பின்பற்றி அதனை நிறைவேற்றியபின் வயல் அளவில் தகுதியான வயல்மட்ட விதையாக அறிவிக்கப்படுகிறது.<br><br>இவ்விதை புறத்தூய்மை, இனத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் ஆகிய தரநிர்ணயங்களில் பரிந்துரைக்கப்பட்ட அளவில் தேர்ச்சி பெற வேண்டும்.<br>உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விதைச்சான்று அலுவலரால் ஆய்விடப்பட்டு, துறையின் கீழ் இயங்கி வரும் அருகில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | இவ்விதைகளை விதை சாகுபடியாளர் தங்கள் சொந்த செலவில் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும்.<br>இவ்வாறு விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட விதைகளுக்கு உணவு வழங்கல் துறை நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல் மற்றும் சிறுதானிய விதைகளுக்கு 90 சதவீதமும், பயறு மற்றும் எண்ணெய்வித்து விதைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில் 80 சதவீதமும் முன் பணமாக விதைப்பண்ணை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.<br>விதைச்சான்று அலுவலரின் முன்னிலையில் இவ்விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படும்.<br>சுத்திகரிப்பு நிறைவுற்றதும் விதைச்சான்று அலுவலரால் விதைத் தரத்தினை உறுதி செய்வதற்காக விதை மாதிரிகள் எடுக்கப்படும்.<br>இம்மாதிரிகள் பரிசோதனைக்காக சம்மந்தப்பட்ட விதை பரிசோதனை ஆய்வகங்களுக்கு அனுப்பப்படும். விதை பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதனைக்குப் பின் முடிவுகள் அறிவிக்கப்படும்.<br>விதை தரத்தினை உறுதி செய்யாத உற்பத்தியாளர் ஏற்கெனவே வழங்கப்பட்ட முன்பணத்தொகையினை ஒரே தவணையில் திருப்பி செலுத்தி உற்பத்தி பொருட்களை திரும்ப பெற்றுக்கொள்ளவேண்டும்.<br>தரமுள்ளதாக அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி இவை விதைகளாக கருதப்படும்.<br>தற்போது சம்மந்தப்பட்ட பயிர் மற்றும் நிலை ஆகியவற்றிக்கு நிர்ணயித்த கொள்முதல் விலையின்படி விவசாயிகள் உற்பத்தி செய்த விதைக்கான முழுத்தொகையினையும் பெற தகுதியுடையவர் ஆகிறார்.<br>அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட முழு விலையிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்ட முன்பணத் தொகையினை தொகையினை கழித்து மீதமுள்ள தொகை வழங்கப்படும். | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><u>வட்டார அளவில்</u><br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |

<table>
<tr><th>நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்</th><th>தகுதிகளும் நிபந்தனைகளும்</th><th>தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்</th></tr>
<tr><td colspan="3">ஆ) பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்<br>அ. நெல்</td></tr>
<tr><td colspan="3">பேரியல் மேலாண்மைத் திட்டம் – தானிய மேம்பாட்டுத் திட்டம்</td></tr>
<tr><td>i) தரமான விதை விநியோகம்<br>வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து விவசாயிகள் விதைகள் வாங்கும் போது விற்பனை விலையில் நெல் விதைக்கு கிலோவுக்கு ரூ.5/– விநியோக மானியம்</td><td rowspan="3">அனைத்து விவசாயிகளும் இச்சலுகைக்கு தகுதியுடையவர்கள்.<br><br>சிறு / குறு / பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br><br>ஆதி திராவிடர் பழங்குடியின விவசாயிகளுக்கு திட்டத்தில் 30 சதவீத நிதி உறுதி அளிக்கப்படுகிறது.<br><br>தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் – அரிசி செயல்படுத்தப்படும் நாகப்பட்டினம், திருவாரூர், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள், நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.</td><td rowspan="3"><u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>வேளாண்மை உதவி இயக்குநர்<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர்</td></tr>
<tr><td>ii) செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கம்<br>மேம்படுத்தப்பட்ட விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டக்கலவை மானியத்தில் வழங்கப்படுகின்றன.<br>0.4 எக்டர் பரப்புள்ள ஒரு செயல்விளக்கம் அமைக்க இடுபொருள் மானியம் ரூ.3,000/–</td></tr>
<tr><td>iii) ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் மற்றும் பயிற்சி (விவசாயிகள் வயல்வெளிப்பள்ளி)<br>30 விவசாயிகள் அடங்கிய ஒரு வயல் வெளிப் பள்ளி பயிற்சிக்கு மதிப்பூதியம், பயிற்சி சாதனங்கள் மற்றும் வயல் விழா நடத்த ஒட்டுமொத்த தொகையாக ரூ.17,000/–</td></tr>
</table>

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ஆ) மக்காச்சோளம்**<br>**எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம்** | | |
| i) **மக்காச்சோள சான்றுவிதை உற்பத்தி மானியம்**<br>குவிண்டாலுக்கு ரூ.1000/–வீதம் | இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், கரூர், பெரம்பலூர், அரியலூர், விருதுநகர், தேனி, விழுப்புரம், வேலூர், சேலம், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிரிடும் அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் சலுகை பெற தகுதியுடையவர்கள்.<br><br>சிறு/ குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது.<br><br>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு – 24%<br><br>பண்ணை மகளிருக்கு நிதி ஒதுக்கீடு – 30% | **<u>கிராம அளவில்</u>**<br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br>**<u>மாவட்ட அளவில்</u>**<br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ii) **வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதை விநியோக மானியம்.**<br>சான்று விதை வாங்கும் விவசாயிகளுக்கு விற்பனை விலையில் 50 சத மானியம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.1200/– வீதம் இதில் எது குறைவோ | | |
| iii) துறை மூலம் **5 எக்டர் பெருவிளக்கத்திடல் அமைக்க** இடுபொருள் செலவினத்தில் 50 சத மானியம் (அல்லது) அதிகபட்சமாக ஒரு செயல்விளக்கத்திற்கு ரூ.4000/- வீதம்<br>iv) **2 கிலோ மக்காச்சோள சிறுதளைகள் இலவசமாக வழங்குதல்**<br>v) **10 எக்டர் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம்**<br>ஒரு *செயல் விளக்கத்திற்கு* ரூ.22680/- *வீதம்* | | |
| vi) **விவசாயிகளுக்கு பயிற்சி ( குழுவிற்கு 50 விவசாயிகள் வீதம்)**<br>ஒரு விவசாயிக்கு ரூ.300/– வீதம் 2 நாட்களுக்கு | | |
| vii) நீர் ஆதாரத்திலிருந்து வயலுக்கு அதிகபட்சமாக 800 மீட்டர் நீளம் வரை நீர் எடுத்து செல்ல அனைத்து வகை (பி.வி.சி./ எச்.டி.பி.இ. ஏனைய) குழாய்களுக்கும் விவசாயிகளின் தேவைக்கேற்ப 50 சத மானியம் அல்லது ரூ.15,000/– | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **இ எண்ணெய்வித்துக்கள்**<br><br>**எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம்** | | |
| i) **ஆதாரம் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி –**<br>துறைக்கு விதைகள் உற்பத்தி செய்து வழங்கு வோருக்கு குவிண்டாலுக்கு மானியம் ரூ.1000/– | துறைக்கு ஆதாரம் மற்றும் சான்று விதை உற்பத்தி செய்து வழங்கும் விவசாயிகள் அனைவரும் இதனைப்பெற தகுதி உடையவர் ஆவர். | <u>**கிராம அளவில்**</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>**வட்டார அளவில்**</u><br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>**மாவட்ட அளவில்**</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ii) **சான்றுவிதைகள் விநியோகம் –**<br>விதை விலையில் 50 சதவீதம் அல்லது குவிண்டாலுக்கு ரூ.1200/– இதில் குறைவான தொகையே மானியம் | கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து எண்ணெய்வித்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் தகுதியுள்ளவர்கள்.<br><br>சிறு/ மிகச்சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை<br><br>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் – 24%<br><br>பண்ணை மகளிர் – 30% | |
| iii) **பெருவிளக்கப் பண்ணை அமைத்தல் ஒவ்வொன்றும் 5 எக்டர் வீதம்**<br>5 எக்டர் செயல்விளக்கம் இடுபொருள் விலையில் 50 சதம் அல்லது திடல் ஒன்றுக்கு<br>நிலக்கடலை – ரூ.4000/–<br>எள் – ரூ.1500/–<br>சூரியகாந்தி– ரூ.2500/– | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| iv) **ரைசோபியம் பொட்டலங்கள் வழங்குதல் –** விலையில் 50 சதம் மானியம் அல்லது எக்டருக்கு ரூ.100/– இதில் குறைவான தொகையே மானியம் | கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து எண்ணெய்வித்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் தகுதியுள்ளவர்கள். சிறு/ மிகச்சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை | |
| v) **10 எக்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கத் திடல்கள்** – செயல்விளக்கத் திடல் அமைக்க இடுபொருள் செலவினம் மற்றும் பயிற்சிக்காக ரூ.22,680/–. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் – 24%<br>பண்ணை மகளிர் 30% | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள் |
| vi) **ஜிப்சம் விநியோகம் –** எக்டருக்கு போக்குவரத்து செலவினம் உட்பட இடுபொருள் விலையில் 50 சதவீதம் அல்லது ரூ.750/– மானியமாக இதில் குறைவான தொகையே மானியம் | | <u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br>*வேளாண்மை உதவி இயக்குநர்* |
| vii) **பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் –**<br>அ) கைத்தெளிப்பானுக்கு 50 சதம் மானியம் அல்லது ரூ.800/– இதில் குறைவான தொகையே மானியம்<br>ஆ) விசைத்தெளிப்பானுக்கு 50 சதம் மானியம் அல்லது கருவி ஒன்றுக்கு ரூ.2000/– இதில் குறைவான தொகையே மானியம் | | <u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| viii) **எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி**<br>ஒரு பயிற்சிக்கு 50 விவசாயிகளுக்கு இடைநிகழ்வு செலவினமாக ரூ.15000/– | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| ix) **தாவர பூச்சிக்கொல்லி மருந்து விநியோகம்**<br>50 சத மானியம் அல்லது எக்டருக்கு ரூ.250/– இதில் குறைவான தொகையே மானியம் | கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து எண்ணெய்வித்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் தகுதியுள்ளவர்கள்<br><br>சிறு / மிகச்சிறு விவசாயிகளுக்கு<br><br>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் – 24%<br>பண்ணை மகளிர் 30% | **<u>கிராம அளவில்</u>**<br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br>**<u>வட்டார அளவில்</u>**<br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br>**<u>மாவட்ட அளவில்</u>**<br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| x**) களைக்கொல்லி விநியோகம்**<br>**50** சத மானியம் அல்லது எக்டருக்கு ரூ.**500/–** இதில் குறைவான தொகையே மானியம் | | |
| xi**)** நீர் ஆதாரத்திலிருந்து வயலுக்கு அதிகபட்சமாக **800** மீட்டர் நீளம் வரை நீர் எடுத்து செல்ல அனைத்து வகை (பி.வி.சி. / எச்.டி.பி.இ. ஏனைய) குழாய்களுக்கும் விவசாயிகளின் தேவைக்கேற்ப **50** சத மானியம் அல்லது ரூ.**15,000/–** | | |
| xii) **மணிலா பயிருக்கு கூட்டு நுண்ணூட்டக் கலவை தெளிப்பு**<br>– டி.ஏ.பி., அமோனியம் சல்பேட், போராக்ஸ் அடங்கிய நுண்ணூட்ட கலவை தெளிப்பிற்கு எக்டருக்கு ரூ.200 மானியம் | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ஈ) எண்ணெய்ப்பனை**<br>**எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் – எண்ணெய்ப்பனை** | | |
| **i) பரப்பு விரிவாக்கம்** உழவு மற்றும் இதர சாகுபடி செலவினங்களுக்காக எக்டர் ஒன்றுக்கு ரூ7000/–<br>**– கன்றுகள் நட மானியம்** – எக்டர் ஒன்றுக்கு 143 கன்றுகளுக்கு ரூ.7150/– மானியத்தில் எண்ணெய்ப் பனை கன்றுகள் நடவிற்கு பின் வழங்குதல் – ஒரே தவணையாக | நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, கரூர், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், வேலூர், திருநெல்வேலி மற்றும் தேனி மாவட்டங்களில் எண்ணெய்பனை சாகுபடி செய்யும் விவசாயிகள் | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ii) **சாகுபடி பராமரிப்பு செலவினம் –**<br>எக்டருக்கு<br>இரண்டாம் ஆண்டிற்கு ரூ.2450/–<br>3ம் ஆண்டிற்கு ரூ.2800/–<br>4ம் ஆண்டிற்கு ரூ.3250/– | | |
| iii) **எண்ணெய்ப்பனை உற்பத்திக்கான விவசாயிகள் பயிற்சி –**<br>50 விவசாயிகள் கொண்ட ஒரு குழுவிற்கு 2 நாட்கள் பயிற்சிக்கான இடைநிகழ்வு செலவினங்களான போக்குவரத்து, உணவு, பயிற்சி சாதனங்கள், பயிற்சியாளர்களுக்கான ஊக்கத்தொகை, புத்தூட்ட செலவு ஆகியவற்றிற்காக பயிற்சிக்கு ரூ.15,000/– வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. | | |
| iv) கன்றுகளின் வேர்களை எலித் தொல்லையிலிருந்து பாதுகாக்க கம்பி வலை அமைத்தல்<br>கன்று ஒன்றுக்கு ரூ.20/– வீதம் எக்டருக்கு ரூ.2,860/– | | |
| v) **ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகத்தின் கீழ்**<br>காண்டாமிருக வண்டின் தாக்குதலைக் கட்டுப்படுத்த கவர்ச்சிப் பொறி: 50 சத மானியம் அதிகபட்சம் எக்டருக்கு ரூ.100/– | | |
| vi) **சொட்டுநீர் பாசன மானியம்**<br>**1)** எக்டருக்கு ரூ.9,300/<br><br>**2)** எக்டருக்கு ரூ.6,500/ | சிறு / மிகச்சிறு / ஆதிதிராவிடர் / பழங்குடியின விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள்<br>பிற விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **உ) பருத்தி**<br>**பருத்தி தொழில் நுட்ப சிறு குழுமம் -II** | | |
| i) **ஆதார விதை உற்பத்தி** இரகங்கள்/ வீரிய ஒட்டு இரகங்களுக்கு குவிண்டாலுக்கு 50 சத மானியம் (அல்லது ) ரூ.5000/– | விதைப் பண்ணை அமைப்பதற்காக துறையுடன் பதிவு செய்து விதை வழங்கும் விவசாயிகள் அனைவரும் இம்மானியத்திற்கு தகுதியுடையவராவர். | |
| ii) **சான்று விதைகள் உற்பத்தி** இரகங்கள்/ வீரிய ஒட்டு இரகங்களுக்கு குவிண்டாலுக்கு 25 சத மானியம் ( அல்லது ) ரூ.1500/- | | |
| iii) **சான்று விதை விநியோகம்** இரகங்கள் – சந்தை விலையில் 25 சத மானியம்<br><br>மிக நீண்ட இழை பருத்தி வீரிய ஒட்டுஇரகங்களுக்கு சந்தை விலையில் 50 சத மானியம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.2000/– | கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள், விவசாய ஆர்வலர் குழுக்கள் மற்றும் பண்ணை மகளிர் குழுக்கள் ஆகியோரும் மானியம் பெற தகுதியுடையவர்கள்.<br><br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பருத்தி விவசாயிகள் 24 சதவீத அளவில் பயனடைவர். (16% ஆதிதிராவிடர் 8% பழங்குடியினர்)<br>30 சதவீத அளவில் பெண் விவசாயிகள் பயனடைவர். | **<u>கிராம அளவில்</u>**<br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br>**<u>மாவட்ட அளவில்</u>**<br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| iv) **இனக்கவர்ச்சி பொறி மற்றும் ஈர்ப்பான் விநியோகம்** 50 சத மானியம் எக்டருக்கு ரூ.300/– வரை. | | |
| v) **தாவர பூச்சிக்கொல்லி/ உயிரியல்கட்டுப்பாட்டுக் காரணிகள் விநியோகம்.** 50 சத மானியம் எக்டருக்கு ரூ.900/– வரை. | | |
| vi) **பயிர்பாதுகாப்பு கருவிகள் விநியோகம்**<br>1) கைத் தெளிப்பான் 50 சத மானியம். கருவி ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.800/–<br>2) விசை தெளிப்பான் 50 சத மானியம்.<br>கருவி ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 2000/– | | |
| vii) **30 விவசாயிகள் அடங்கிய உழவர் வயல்வெளிப் பள்ளி** ஒன்றுக்கு மொத்த மான்யத் தொகை ரூ.17000/– | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| viii) **விதை நேர்த்தி மருந்து விநியோகம்**<br>கிலோவிற்கு 50 சத மானியம் (அல்லது ) ரூ.40/– | கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் தகுதியுடையவர்கள்.<br><br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பருத்தி விவசாயிகள் 25 சதவீத அளவில் பயனடைவர். ( 16% ஆதிதிராவிடர்<br>8% பழங்குடியினர்)<br>30 சதவீத அளவில் பெண் விவசாயிகள் பயனடைவர். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ix) **உயிர் உரங்கள் விநியோகம்.**<br>25 சத மானியம் அல்லது அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.25 | | |
| x) **நுண்ணூட்ட கலவை விநியோகம்**<br>25 சத மானியம் அல்லது அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.120 | | |
| xi) **நீர் ஆதாரத்திலிருந்து வயலுக்கு அதிகபட்சமாக 800** மீட்டர் நீளம் வரை நீர் எடுத்து செல்ல அனைத்து வகை (பி.வி.சி. / எச்.டி.பி.இ. ஏனைய) குழாய்களுக்கும் விவசாயிகளின் தேவைக்கேற்ப 25 சத மானியம் அல்லது ரூ.15,000/– | | |
| xii) **50 விவசாயிகள் கொண்ட பயிற்சி** ஒன்றுக்கு ரூ.5000/– | | |

**ஊ) தென்னை**

**1. தென்னை மரக்கன்றுகள் விநியோகம்**

| | | |
|---|---|---|
| i) **நெட்டை தென்னங் கன்றுகள் விநியோகம்** – கன்று ஒன்றின் விலை ரூ.15/–. | நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கு தென்னங்கன்று வழங்குதல் | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ii) நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் விநியோகம்**<br>கன்று ஒன்றின் விலை ரூ.25/–. | | |
| iii) **குட்டை x நெட்டை தென்னங்கன்றுகள் விநியோகம்**<br>கன்று ஒன்றின் விலை ரூ.75/–. | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **2) தென்னையில் உற்பத்தி திறன் அதிகரிப்பதற்கான ஒருங்கிணைந்த சாகுபடித் திட்டம்** | | |
| **செயல்விளக்க பாத்தி அமைத்தல்** – எக்டர் ஒன்றுக்கு ரூ.35,000/– ஒரு வருடத்திற்கு ரூ.17,500/– .வீதம் இரண்டு தவணைகளில் | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து தென்னை விவசாயிகளும் தகுதியுடையவர். | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் *வேளாண்மை உதவி இயக்குநர்*<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ஏ. தமிழ்நாட்டில் காட்டாமணக்கு (ஜெட்ரோபா) சாகுபடித் திட்டம்** | | |
| அ. ஒரு எக்டருக்கு 1660 கன்றுகள். 50 சத மானித்தில் கன்றுகள் விநியோகம். கன்று ஒன்றுக்கு ரூ.1.50 மானியம்<br><br>ஆ. விவசாயிகள் பயிற்சி<br>100 விவசாயிகள் அடங்கிய ஒரு குழுவிற்கு ஒரு நாள் பயிற்சிக்கு ரூ.15,000/– | சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் *வேளாண்மை உதவி இயக்குநர்*<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **III. மண் வளத்தை பாதுகாக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்**<br>**i பசுந்தாள் உர விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்** | | |
| **பசுந்தாள் உர விதை விநியோகம்**<br><br>விதை விலையில் 25 சதவீதம் மானியம் வழங்கப் படுகிறது. | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர். | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் *வேளாண்மை உதவி இயக்குநர்*<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ii. நுண்ணூட்ட கலவை விநியோகம்** | | |
| **அனைத்து பயிர்களுக்கான நுண்ணூட்டக்கலவை முழு விலையில் விநியோகித்தல் –**<br><br>கிலோ ஒன்றுக்கு<br>நெல் (அடி உரம்) ரூ.22.80<br>சிறுதானியம் ரூ.52.70<br>தென்னை ரூ.51.20<br>பருத்தி (அடி உரம்) ரூ.65.50<br>பயறுவகைகள் ரூ.90.40<br>கரும்பு (அடி உரம்) ரூ.26.20<br>நிலக்கடலை ரூ.42.00 | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **iii. உயிர் உர விநியோகம்** | | |
| **முழு விலையில் உயிர் உரங்கள் விநியோகம் –** அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா ஒவ்வொன்றும் 200 கிராம் எடையுள்ள பாக்கெட் ஒன்று ரூ.6.00. | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் | |
| **iv. நீலப்பச்சை பாசி விநியோகம்** | | |
| **நீலப்பச்சை பாசி முழு விலையில் விநியோகம் –** கிலோ ஒன்றுக்கு ரூ.2.75 வீதம். | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் | |
| **v. வேளாண் கழிவுகளிலிருந்து மண்புழு உரம் தயாரித்தல்** | | |
| **செயல் விளக்கம் மற்றும் பயிற்சி –** செயல் விளக்கம் அமைக்க ரூ.1200/–ம், பயிற்சியில் பங்குபெறும் 50 விவசாயிளுக்கு இடைநிகழ்வு செலவினமாக தலா ரூ.50/–ம் வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகள் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **vi. புளூரோட்டடஸ் பூஞ்சாணம் மூலம் பண்ணைக் கழிவுகளிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரித்தல்** | | |
| **சிறுதளை விநியோகம் -** 5 கிலோ யூரியா, ஒரு கிலோ புளூரோட்டடஸ், மற்றும் தொழில்நுட்ப துண்டு பிரசுரம் அடங்கிய ரூ.140/– மதிப்புள்ள 5000 சிறுதளைகள் இலவசமாக வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகள் | <u>கிராம அளவில்</u><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><u>வட்டார அளவில்</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **vii. களர் உவர் நிலச் சீர்திருத்தம்** | | |
| **ஜிப்சம் மற்றும் சிங்சல்பேட் விநியோகம் மற்றும் வடிகால் வசதி அமைக்க நிதியுதவி**<br>ஜிப்சம் மற்றும் சிங் சல்பேட் ஆகியவற்றிற்கு 50 சத மானியமும், வடிகால் வசதி அமைக்க ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.1000/– | மண்பரிசோதனை அடிப்படையில் களர் மற்றும் உவர் நிலமாக அறிவிக்கப்பட்ட விவசாய நிலங்களில் நாகப்பட்டினம், திருவாரூர் காஞ்சீபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம், மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. | நாகப்பட்டினம், திருவாரூர் காஞ்சீபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள் / வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **viii. மண் மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதனை** | | |
| அ) **மண் மாதிரி பரிசோதனை –** மண்ணில் உள்ள பேரூட்ட சத்துக்களை பரிசோதனை செய்ய சலுகை கட்டணம் ரூ.5/–ம், நுண்ணூட்ட சத்துக்களை பரிசோதனை செய்ய ரூ..5/–ம் வசூலிக்கப் படுகிறது. | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் | <u>**கிராம அளவில்**</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>**வட்டார அளவில்**</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>**மாவட்ட அளவில்**</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ஆ) **நீர் மாதிரி பரிசோதனை –** நீர் மாதிரிகளை பரிசோதனை செய்ய சலுகை கட்டணமாக ரூ.10/– வசூலிக்கப்படுகிறது. | | |
| **IV.** பயிர்க்காப்பீடு<br>**அ) தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் (NAIS)** | | |
| காப்பீட்டுத் தொகையில் 50 சதம் மானியம் கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் (குத்தகைதாரர்கள் உட்பட) மற்றும் கடன்பெறா சிறு / குறு விவசாயிகளுக்கும் (குத்தகைதாரர்கள் உட்பட) 55 சத மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 50 சத மானியம் | நெல், சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், கரும்பு, பருத்தி, பணப்பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகள் | |
| | | |

| | | |
|---|---|---|
| **ஆ) வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம்**<br><br>**காப்பீட்டுத் தொகையில் மானியம் –** விவசாயிகளின் பங்குத் தொகை போக மீத காப்பீட்டுத் தொகையினை மானியமாக மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாக வழங்குகிறது. | **1.** தர்மபுரி, சேலம், விருதுநகர், பெரம்பலூர், அரியலூர், கோயம்புத்தூர், திருப்பூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கடன் பெறும் மற்றும் கடன்பெறா விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் சலுகை பெற தகுதியுடையவர்கள்.<br>**2.** கடன் பெறும் விவசாயிகள் கட்டாயமாக இத்திட்டத்தில் சேர்க்கப்படுவர்.<br>**3.** கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் சேர்க்கப்படுவர். இவ்விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தினையோ வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டத்தினையோ தேர்வு செய்யலாம். | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **V. பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்**<br>**1) உயிரியல் முறை மூலம் பூச்சி கட்டுப்பாடு** | | |
| i) **தென்னையில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த பச்சை மஸ்காரடைன் பூஞ்சாணம் விநியோகம் –** ஒரு எக்டருக்கு ஒரு குப்பி இலவசமாக | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ii) தென்னையில் கருந்தலைப் புழுவினை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விநியோகம் – ரூ.35/–** சேவை கட்டணமாக | | |
| iii) **கரும்பில் இளங்குருத்துப்புழு மற்றும் இடைக்கணு புழு மற்றும் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விநியோகம்–** எக்டருக்கு ரூ.**40/–** | காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தர்மபுரி, கோயம்புத்தூர், திருப்பூர் ஈரோடு, திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும். | |
| iv) **பருத்தியில் புரோடீனியா புழுவை கட்டுப்படுத்த என்பிவி வைரஸ் விநியோகம்** – எக்டருக்கு ரூ.**43**/– | ஈரோடு, விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்ட அனைத்து விவசாயிகள் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **VI. விரிவாக்கம் மற்றும் பயிற்சிக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| **அ. உழவர் பயிற்சி நிலையங்கள்** | | |
| i) **உழவர் பயிற்சி–** 2 நாட்கள் நடத்தப்படும் கிராம அடிப்படை பயிற்சி களுக்கு ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் உதவித் தொகை வழங்கப் படுகிறது. | | |
| ii) **உழவர் மன்ற அமைப்பாளர் பயிற்சி** 2 நாட்கள் நடத்தப்படும் பயிற்சிக்கு ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் உதவித் தொகை வழங்கப் படுகிறது. | | |
| iii) **உழவர் சுற்றுலா–** 50 விவசாயிகள் அடங்கிய குழுவினை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2000/–. | மதுரை, கோவை, திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், அரியலூர், திருப்பூர் மற்றும் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகள். திட்ட நிதியில் 30 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகள் | அந்தந்த மாவட்டத்தில் உள்ள சம்மந்தப்பட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) / வேளாண்மை அலுவலர். |
| iv) **விவசாயிகளுக்கான பரிசுகள்** சிறந்த சாதனை புரிந்த 10 விவசாயிகளுக்கு ரூ.150/– மதிப்புள்ள பரிசுகள் உழவர் தினத்தில் வழங்கப் படுகிறது | | |
| v) **மாதிரி செயல்விளக்க ஊக்கத் தொகை** ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.20/–வீதம் | | |
| vi) **புத்தூட்டப் பயிற்சி** ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.20/–வீதம் | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ஆ. பயிர் விளைச்சல் போட்டி** | | |
| **மாநில அளவில் பரிசு**<br>நெல் மற்றும் நிலக்கடலைக்கு முதல் பரிசு ரூ.25,000/–<br>பிற பயிர்களுக்கு ரூ.15,000/–<br><br>நெல் மற்றும் நிலக்கடலைக்கு இரண்டாம் பரிசு ரூ.15,000/–<br>பிற பயிர்களுக்கு ரூ.10,000/–<br><br><u>மாவட்ட அளவில் பரிசு</u><br>நெல் மற்றும் நிலக்கடலைக்கு முதல் பரிசு ரூ.15,000/– பிற பயிர்களுக்கு ரூ.10,000/–<br>நெல் மற்றும் நிலக்கடலைக்கு இரண்டாம் பரிசு ரூ.10,000/–<br>பிற பயிர்களுக்கு ரூ.5,000/– | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் பின்வரும் பதிவுக்கட்டணம் செலுத்தி போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து விவசாயிகளுக்கும்<br><br>1)மாநில அளவில் போட்டிக்கு நெல் மற்றும் நிலக்கடலைப் பயிருக்கு ரூ.100/– ம்<br>இதர பயிர்களுக்கு ரூ.50/–ம்<br><br>2)மாவட்ட அளவில் போட்டிக்கு நெல் மற்றும் நிலக்கடலைப் பயிருக்கு ரூ.50/– ம்<br>இதர பயிர்களுக்கு ரூ.25/–ம்<br>பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டும்.<br><br>மாநில அளவிலான பரிசுகளை வேளாண் ஆணையர் அவர்களும், மாவட்ட அளவிலான பரிசுகளை மாவட்ட வேளாண் இணை இயக்குநர்களும் இறுதி செய்வர். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **VII. தமிழ்நாடு நீர்வள நில வள திட்டம் (IAMWARM)** | | |
| **செயல்விளக்கங்கள்** | | |
| **i).** செம்மை நெல் செயல்விளக்கம் (1 எக்டர்) 100 சத மானியம் அல்லது ரூ.6000/–<br><br>ii) **பயறு வகைகள் செயல்விளக்கம் ( 1** எக்டர்) 100 சத மானியம் அல்லது ரூ.2500/–<br><br>iii) **வீரிய ஒட்டு இரக மக்காச் சோள செயல்விளக்கம்** ( 1 எக்டர்) 100 சத மானியம் அதிகபட்சமாக ரூ.4000/–<br><br>iv) **நிலக்கடலை செயல்விளக்கம் ( 1** எக்டர்) 100 சத மானியம் அதிகபட்சமாக ரூ.4000/–<br><br>v) **கேழ்வரகு செயல்விளக்கம்** (1 எக்டர்) 100 சத மானியம் அதிகபட்சமாக ரூ.2500/– | பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கம் மூலமாக துணை ஆற்றுப் படுகைகளில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன் பெறுவர்.<br><br>**முதற்கட்டம் (2007–08)** 9 துணை ஆற்றுப் படுகைகள் – வராக நதி (விழுப்புரம் / திருவண்ணாமலை), மேல்வெள்ளார் (சேலம்), பாலாறு (கோயம்புத்தூர் / ஈரோடு), ஆழியாறு (கோயம்புத்தூர்), தென்வெள்ளார் (புதுக்கோட்டை/ திருச்சி) பாம்பாறு (புதுக்கோட்டை/ சிவகங்கை), கோட்டக்கரையாறு (சிவகங்கை / இராமநாதபுரம்), மணிமுத்தாறு (சிவகங்கை / இராமநாதபுரம் / மதுரை) மற்றும் அர்ஜூனா நதி (விருதுநகர்)<br><br>**இரண்டாம் கட்டம்( 2008–09)** மேலும் 16 துணை ஆற்றுப் படுகைகள் – பொய்னி (வேலூர்) கவுண்டன்யா நதி (வேலூர்), பொன்னையாறு கிருஷ்ணகிரி வரை (கிருஷ்ணகிரி), ஸ்வேதாநதி (சேலம், நாமக்கல் மற்றும் பெரம்பலூர்), அணைவாரி ஓடை (பெரம்பலூர்), சின்னாறு (பெரம்பலூர்), அக்னியாறு (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை), அம்புலியாறு (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை), மேல்வைகை (தேனி), வரட்டாறு–நாகலாறு (தேனி), நிசாபாநதி (திருநெல்வேலி), கலிங்கலாறு (திருநெல்வேலி), சின்டப்பள்ளி–உப்போடை (விருதுநகர்) சிங்கோட்டையாறு (விருதுநகர்), மேல்குண்டாறு (மதுரை) மற்றும் தெற்காறு (மதுரை)<br><br>**மூன்றாம் கட்டம் 2009–2010** மேலும் 30 துணை ஆற்றுப் படுகைகள் – ஆரணியாறு (திருவள்ளூர்), கொசஸ்தலையாறு (காஞ்சிபுரம் / திருவள்ளூர்), நல்லாவூர் (விழுப்புரம்), ஆங்கூர் (காஞ்சிபுரம் / விழுப்புரம் / திருவண்ணாமலை), மார்கண்டநதி (கிருஷ்ணகிரி), கம்பைநல்லூர் (தர்மபுரி), கோவிலூர் (தர்மபுரி), பாம்பனாறு – வரட்டாறு (திருவண்ணாமலை), கெடிலம் (கடலூர் / விழுப்புரம்), பாம்பாறு – திருக்கோவிலூர் வரை (திருவண்ணாமலை), துரிஞ்சலாறு (திருவண்ணாமலை / விழுப்புரம் ) கோமுகிநதி (விழுப்புரம் / கடலூர்) கானல்ஓடை (விருதுநகர் / இராமநாதபுரம் / மதுரை), உத்திரகோசமங்கை (இராமநாதபுரம்) வேம்பாறு ( தூத்துக்குடி / இராமநாதபுரம் / விருதுநகர்), பாலாறு (இராமநாதபுரம்), கிருதாமால் (சிவகங்கை / மதுரை / விருதுநகர் / இராமநாதபுரம்), கீழ்குண்டாறு (இராமநாதபுரம்), தேவியாறு (விருதுநகர்), நகரியாறு (விருதுநகர்), சீவலப்பேரியாறு (விருதுநகர்), உப்பாத்தூர் (தூத்துக்குடி), வல்லம்பட்டி(விருதுநகர்), உப்போடை (தூத்துக்குடி), அனுமான்நதி (நம்பியாறு) (திருநெல்வேலி), கருமேனியாறு (திருநெல்வேலி / தூத்துக்குடி), சாலிக்குளமாறு (தூத்துக்குடி), கோரம்பள்ளம் (தூத்துக்குடி), வைப்பாறு (தூத்துக்குடி, விருதுநகர்), தேனியாறு (தேனி) ஆகிய துணை ஆற்றுப் படுகைகளில் விரிவுபடுத்தப்படவுள்ளது. | வேளாண்மை இணை இயக்குநர் (மாவட்ட அளவில்)<br><br>வேளாண்மை உதவி இயக்குநர் (வட்டார அளவில்)<br><br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் ( வட்டார அளவில் ) |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **VIII. விதை கிராமத் திட்டம்** | | |
| i) நெல், சிறுதானியம், பயறு வகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் ஆதார / சான்று விதைகள் 50 சத மானிய விலையில் விவசாயிகள் தரமான விதை உற்பத்தி செய்ய வழங்கப்படுகிறது. | தரமான விதைகளை தனது சொந்த நிலத்தில் உற்பத்தி செய்து சொந்த உபயோகத்திற்கும், பிற விவசாயிகளுக்கும் வழங்க முன்வரும் அனைத்து விவசாயிகள் | <u>**கிராம அளவில்**</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>**வட்டார அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர் /<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>**மாவட்ட அளவில்**</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ii) **விதை உற்பத்தி குறித்த 3 நாள் தொழில்நுட்ப பயிற்சி** தரமான விதை உற்பத்திக்காக துறை மூலம் 50 சத மானிய விலையில் விதைகள் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்களின் முக்கிய மூன்று நிலைகளில் – ஆண்டுக்கு 4000 பயிற்சிகள் – பயிற்சிக்கு 50 விவசாயிகள் வீதம். | | |
| **iii) விதை கொள்கலன் வழங்குதல்**<br><br>20 குவிண்டால் கொள்ளளவு கொண்ட ஒரு கலனுக்கு ரூ.3000/–, 10 குவிண்டால் கொள்ளளவு கொண்ட ஒரு கலனுக்கு ரூ.1500/– அல்லது 33 சத மானியம் | ஆதி திராவிட விவசாயிகள் | |
| 20 குவிண்டால் கொள்ளளவு கொண்ட ஒரு கலனுக்கு ரூ.2000/–, 10 குவிண்டால் கொள்ளளவு கொண்ட ஒரு கலனுக்கு ரூ.1000/– அல்லது 25 சத மானியம்<br><br>250, 500 மற்றும் 750 கிலோ கொள்ளளவு கொண்ட சிறிய கொள்கலன்கள் மேற்கண்ட மானிய விகிதாச்சாரத்தின் அடிப்படையில் விநியோகம் | இதர விவசாயிகள் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **IX.** தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் – அ. அரிசி<br>நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் | | |
| i) ஒவ்வொரு 100 எக்டர் பரப்பிற்கும் 0.4 எக்டர் பரப்பில் அனைத்து மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பகள் அடங்கிய செயல்விளக்கத் திடல்கள் அமைக்க இடுபொருள் மானியம் ரூ.2500/– | தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் – அரிசி செயல்படும் மாவட்ட அனைத்து விவசாயிகளும்<br><br>சிறு / குறு / மகளிர் விவசாயிகளுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 16 சதவீதம் ஒதுக்கீடு<br><br>பழங்குடியினர் விவசாயிகளுக்கு 8 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ii) ஒவ்வொரு 100 எக்டர் பரப்பிற்கும் 0.4 எக்டர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கத் திடல்கள் அமைக்க இடுபொருள் மானியம் ரூ.3000/– | | |
| iii) ஒவ்வொரு 100 எக்டர் பரப்பிற்கும் 0.4 எக்டர் பரப்பில் வீரிய ஒட்டு நெல்லுக்கான தொழில்நுட்பங்கள் அடங்கிய செயல்விளக்கம் அமைக்க இடுபொருள் மானியம் ரூ.3000/– | | |
| iv) வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்திக்கான உதவித் தொகை குவிண்டாலுக்கு ரூ.1000/– | | |
| v) வீரிய ஒட்டு நெல் விதை விநியோகம் 50 சத மானியம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.2000/– | | |
| vi) உயர் விளைச்சல் இரகங்கள் விதை விநியோகம் 50 சத மானியம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.500/– | | |
| vi) நுண்ணூட்ட உர மானியம் 50 சத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.500/– | | |
| viii) கோனோ களையெடுக்கும் கருவி மற்றும் இதர பண்ணைக் கருவிகளுக்கு 50 சத மானியம் ஒரு விவசாயிக்கு இத்திட்டக் காலத்தில் அதிகபட்சமாக ரூ.3000/– | | |
| ix) பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் தாவர உயிர்க் கொல்லிகளுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.500/– | | |
| x) 30 விவசாயிகள் கொண்ட உழவர் வயல்வெளிப் பள்ளி பயிற்சி ஒன்றுக்கு ரூ.17,000/– | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| xi) உழவில்லா விதையிடும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000<br><br>xii) பல்பயிர் நடவு இயந்திரம் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000<br><br>xiii) பம்பு செட் வழங்குதல் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.10,000<br><br>xiv) சுழல் கலப்பை ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.30,000<br><br>xv). விசை களையெடுக்கும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000<br><br>xvi) விதையிடும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000<br><br>xvii) கை தெளிப்பான் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.800<br><br>xviii) விசை உழுவை ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.45,000<br><br>xix) நடவு செய்யும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.70,000 | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் – அரிசி செயல்படுத்தப்படும் அனைத்து மாவட்ட விவசாயிகளும்<br><br>சிறு / குறு / மகளிர் விவசாயிகளுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 16 சதவீதம் ஒதுக்கீடு<br><br>பழங்குடியினர் விவசாயிகளுக்கு 8 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் –ஆ. பயறு<br>சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களும்** | | |
| i) **ஆதாரம் மற்றும் சான்று விதை உற்பத்திக்கு** குவிண்டாலுக்கு ரூ.1000/– | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் – பயறு செயல்படுத்தப்படும் 13 மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகள்.<br><br>சிறு / குறு / மகளிர் விவசாயிகளுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 16 சதவீதம் ஒதுக்கீடு<br><br>பழங்குடியினர் விவசாயிகளுக்கு 8 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | <u>கிராம அளவில்</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>வட்டார அளவில்</u><br>உதவி வேளாண்மை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>மாவட்ட அளவில்</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ii) சான்று விதை விநியோகம்** 50 சதம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.1200/– | | |
| iii) **ஜிப்சம் விநியோகம்** எக்டருக்கு 50 சத மானியம் போக்குவரத்து செலவினம் உட்பட அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.750/– | | |
| iv) **நுண்ணூர விநியோகம்** 50 சத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.500/– | | |
| v) **ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** செயல்விளக்கத்திற்கான இடுபொருள் விநியோகம் 50 சத விலை அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.750/– | | |
| vi) **தெளிப்புநீர் பாசனக் கருவிகள் விநியோகம்** 50 சத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.7500/– | | |
| vii) உழவில்லா விதையிடும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000 | | |
| viii) பல்பயிர் நடவு இயந்திரம் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000 | | |
| ix) பம்பு செட் வழங்குதல் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.10,000 | | |
| x) சுழல் கலப்பை ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.30,000 | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| xi) விதையிடும் கருவி ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000 | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் – பயறு செயல்படுத்தப்படும் 13 மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகள்.<br><br>சிறு / குறு / மகளிர் விவசாயிகளுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 16 சதவீதம் ஒதுக்கீடு<br><br>பழங்குடியினர் விவசாயிகளுக்கு 8 சதவீதம் ஒதுக்கீடு<br><br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | <u>**கிராம அளவில்**</u><br><br>வேளாண்மை உதவி அலுவலர்கள்<br><br><u>**வட்டார அளவில்**</u><br><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும்<br><br>*வேளாண்மை உதவி இயக்குநர்*<br><br><u>**மாவட்ட அளவில்**</u><br><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| xii) கை தெளிப்பான் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.800 | | |
| xiii) விசை உழுவை ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.45,000 | | |
| xiv). தார்பாய் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.2100 | | |
| xv). கொள் கலன் வழங்குதல்<br>அ. ஒரு மெ.டன் கொள்ளளவு உள்ள கலன் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.5000/–<br><br>ஆ. 0.75 மெ.டன் கொள்ளளவு உள்ள கலன் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.3750/–<br><br>இ. 0.50 மெ.டன் கொள்ளளவு உள்ள கலன் ஒன்றுக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.2500/– | | |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ)<br><br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)<br>தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை—600 035.<br>தொலைபேசி எண். 2435 2686 , 2435 2622 |

**திட்ட எண் 7**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் ( மத்திய திட்டக்குழுவின் சிறப்பு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்) |
| திட்டப்பகுதி | நீலகிரி மாவட்டம் |
| நோக்கம் | ❖ நீலகிரி மாவட்டத்தின் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்<br>❖ மண் அரிமானத்தை தடுத்தல்<br>❖ உள்ளூர் மக்களின் சமுதாய மற்றும் பொருளாதார நிலையை மேம்படைய செய்தல்<br>❖ மண்வளப் பாதுகாப்பு பணிகளின் நன்மைகளை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.<br>❖ நிலச்சரிவைத் தடுத்தல் |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ படிமட்டம் அமைத்தல்<br>❖ வடிகால் சீரமைப்புப் பணிகள்<br>❖ நீர்சேகரிப்பு கட்டுமானங்கள்<br>❖ நீர் சேகரிப்புக் கிணறுகள்<br>❖ படிமட்ட ஆதாரப் பணிகள்<br>❖ ஓடை சீரமைப்புப் பணிகள்<br>❖ வண்டல் சேகரிக்கும் குட்டைகள் அமைத்தல்<br>❖ நிலச்சரிவு தடுப்புப் பணிகள் |
| மானியங்களும், சலுகைகளும் | தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும் மேற்கொள்ளப்படும் செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. நிலச்சரிவு தடுப்புப் பணிகள் அரசின் 100 விழுக்காடு மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. |
| தகுதி | தேர்வு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நிலங்கள் உள்ள அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர். |
| கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | உதவி செயற் பொறியாளர் (வே.பொ), IGBP காம்ப்ளக்ஸ், தாவரவியல் பூங்கா சாலை, உதகமண்டலம் – 643 001.<br>உதவி செயற் பொறியாளர் (வே.பொ.),மைசூர் ரோடு, செல்விப்பேட்டை, கூடலூர்– 643 312, நீலகிரி மாவட்டம்.<br>உதவி செயற் பொறியாளர் (வே.பொ), நிலச்சரிவு தடுப்புத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 117, பிருந்தாவன் ஸ்கூல் ரோடு, வெலிங்டன் பஜார், வெலிங்டன், குன்னூர் – 643 102.<br>செயற் பொறியாளர் (வே.பொ), தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகம், விஜயநகரம், உதகமண்டலம் – 643 001<br>கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), குன்னூர்.<br>தலைமைப் பொறியாளர் , வேளாண்மைப் பொறியியல் துறை, நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண். 2435 2686 , 2435 2622 |

**திட்ட எண் 8**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் ( மத்திய திட்டக்குழுவின் சிறப்பு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்) |
| திட்டப்பகுதி | கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| நோக்கம் | ❖ மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளின் சுற்றுப்புற சூழலை மறுசீரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.<br>❖ மண் அரிமானத்தை தடுத்து சுற்றுச் சூழல் சமநிலையை பராமரித்தல்.<br>❖ விவசாயிகளுக்கிடையே சுற்றுச் சூழலை பாதுகாக்க மற்றும் மேம்படுத்த விழிப்புணர்வை உருவாக்குதல்.<br>❖ உள்ளூர் மக்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ சம உயர குழிகள் அமைத்தல்<br>❖ கம்பிவலை கட்டமைப்புகள் அமைத்தல்<br>❖ வடிகால் பராமரிப்புப் பணி செயல்படுத்துதல்<br>❖ சம உயர கல்வரப்பு அமைத்தல்<br>❖ வரப்பு அமைத்தல்<br>❖ தடுப்பணை கட்டுதல்<br>❖ கிராம குளங்கள் அமைத்தல்<br>❖ நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்<br>❖ பண்ணைக் குட்டைகள் அமைத்தல்<br>❖ நிலம் வடிவமைத்தல் |
| மானியங்களும், சலுகைகளும் | தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும் மேற்கொள்ளப்படும் செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. |
| தகுதி | தேர்வு செய்யப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் நிலங்கள் உள்ள அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர். |
| கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய் கோட்ட அளவில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)<br>தலைமைப் பொறியாளர் ,<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை–600 035.<br>தொலைபேசி எண். 2435 2686 , 2435 2622 |

**திட்ட எண் 9**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம். |

திட்டப்பகுதி

| | |
|---|---|
| விழுப்புரம் | கல்ராயன் மலை |
| வேலூர் | ஜவ்வாது மலை |
| திருவண்ணாமலை | ஜவ்வாது மலை |
| சேலம் | கல்ராயன் மற்றும் சேர்வராயன் மலை |
| நாமக்கல் | கொல்லி மலை |
| தர்மபுரி | சித்தேரி மலை |
| திருச்சி | பச்சை மலை |

நோக்கம்

- ❖ பழங்குடியினரின் நிலங்களில் மண் அரிப்பை கட்டுப்படுத்துதல் மற்றும் நிலங்களின் தரம் குறையாமல் தடுத்தல்.
- ❖ நிலத்தடி நீர் திறனை அதிகரித்தல்.
- ❖ பழங்குடியினரின் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்.
- ❖ பழங்குடி விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துதல்.

செயல்படுத்தப்படும் பணிகள்

- ❖ சம உயர கல் வரப்பு / சமஉயர கற்சுவர் கட்டுதல்
- ❖ நிலம் வடிவமைத்தல்
- ❖ குழாய் பதித்தல்
- ❖ உழவுப் பணிகள்
- ❖ பாசன தடுப்பு அணைகள் கட்டுதல்
- ❖ பெரிய மற்றும் சிறிய தடுப்பு அணைகள் கட்டுதல்

| | |
|---|---|
| மானியங்களும், சலுகைகளும் | தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் 100 விழுக்காடு மானியத்தில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| தகுதி | மேற்கண்ட 7 மாவட்டங்களில் திட்டம் செயலாக்கப்படும் பகுதிகளில் சொந்த நிலங்கள் உள்ள பழங்குடியின விவசாயிகள் தகுதியுடையவர். |
| கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்ட அளவில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்(வே.பொ)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)<br>தலைமைப் பொறியாளர் , வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை—600 035.<br>தொலைபேசி எண். 2435 2686 , 24352622 |

**திட்ட எண் 10**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) |
| நோக்கம் | ❖ விவசாய பம்புகளின் செயல் திறன் சக்தியை அதிகப்படுத்துதல்.<br>❖ மின்சக்தியை மிச்சப்படுத்துதல் |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ பழைய, திறனற்ற மின்சார பம்பு செட்டுகளுக்குப் பதிலாக இந்திய தரக்கட்டுப்பாட்டு குழுமத்தின் சான்றிதழ் பெற்ற புதிய மின்சார பம்பு செட்டுகள் வழங்குதல். |

மானியங்களும், சலுகைகளும்

| விபரம் | தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு | இதர விவசாயிகளுக்கு |
|---|---|---|
| அனைத்து குதிரைத் திறன் உள்ள பம்பு செட்டுகள் | பம்பு செட்டுகள் விலையில் 50% அல்லது ரூ.12000/– இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும். | பம்பு செட்டுகள் விலையில் 50% அல்லது ரூ.10000/– இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும். |

| | |
|---|---|
| தகுதி | சென்னை நீங்கலாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பழைய, திறனற்ற 0.75க்கு அதிகமாக ஆற்றல் குறியீடுள்ள பம்பு செட்டுகளை வைத்து பாசனம் செய்யும் விவசாயிகள் தகுதியுடையவர். |
| கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய் கோட்ட அளவில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர் (வே.பொ)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர்.(வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)<br>தலைமைப் பொறியாளர் , வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை–600 035.<br>தொலைபேசி எண். 2435 2686 , 2435 2622 |

**திட்ட எண் 11**

திட்டத்தின் பெயர் **உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

நிதி ஆதாரம் மாநில அரசுத் திட்டம்

நோக்கம் நீர் ஆதாரங்களின் நிலையான மேலாண்மையின் மூலம் பாசன வேளாண்மையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் பண்ணை சக்தியை அதிகரித்தல்.

**திட்டப்பகுதி**

| வ. எண். | உபவடிநிலப் பகுதி | மாவட்டம் | | வ. எண். | உபவடிநிலப் பகுதி | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| **அ.** | **நடப்பு திட்டங்கள்** | | | **ஆ.** | **புதிய திட்டங்கள்** | |
| 1. | வராக நதி | விழுப்புரம், திருவண்ணா மலை | | 1. | கடிலம் | விழுப்புரம் / கடலூர் |
| 2. | மேல் வெள்ளாறு | சேலம் | | 2. | புள்ளம்பாடி / கம்பைநல்லூர் | தர்மபுரி |
| 3. | பாலாறு | கோயம்புத்தூர், ஈரோடு | | 3. | கொசத்தலையாறு | திருவள்ளூர், வேலூர் |
| 4. | ஆழியாறு | கோயம்புத்தூர் | | 4. | பாம்பார் முதல் திருக்கோவிலூர் வரை | திருவண்ணாமலை |
| 5. | தெற்கு வெள்ளாறு | புதுக்கோட்டை | | 5. | கோமுகிநதி | கடலூர், விழுப்புரம் |
| 6. | பாம்பாறு | புதுக்கோட்டை, சிவகங்கை | | 6. | துறிஞ்சலாறு | திருவண்ணாமலை விழுப்புரம். |
| 7. | மணிமுத்தாறு | சிவகங்கை | | 7. | சேவலபெரியாறு / முதங்கியாறு | விருதுநகர் |
| 8. | கோட்டக் கரையாறு | சிவகங்கை, இராமநாதபுரம் | | 8. | வைப்பாறு மெயின் ஆறு | தூத்துக்குடி, விருதுநகர் |
| 9. | அர்ஜுனா நதி | விருதுநகர் | | 9. | ஓங்கூர் | காஞ்சிபுரம் , விழுப்புரம் திருவண்ணாமலை |
| 10. | பென்னையாறு | கிருஷ்ணகிரி | | 10. | உப்போடை | தூத்துக்குடி |
| 11. | ஸ்வேதா நதி | சேலம் | | 11. | உத்திரகோச– மங்கையாறு | இராமநாதபுரம் |
| 12. | ஆனைவாரி ஓடை | அரியலூர் | | 12. | கோவிலாறு | தர்மபுரி |
| 13. | சின்னாறு | பெரம்பலூர் | | 13. | ஆரணியாறு | திருவள்ளூர் |
| 14. | அக்னியாறு (மேல் பகுதி) | தஞ்சாவூர், புதுக்கோட்டை | | 14. | மார்கண்டநதி | கிருஷ்ணகிரி |
| 15. | அம்புலியாறு | தஞ்சாவூர், புதுக்கோட்டை | | 15. | தேனியாறு | தேனி |
| 16. | மேல் வைகை | தேனி | | 16. | நல்லாவூர் | விழுப்புரம் |
| 17. | வரட்டாறு–நாகலாறு | தேனி | | 17. | தேவியாறு | விருதுநகர், திருநெல்வேலி |
| 18. | மேல் குண்டாறு | மதுரை | | 18. | அனுமாநதி | திருநெல்வேலி |
| 19. | தெற்காறு | மதுரை | | 19. | கரமனையாறு | தூத்துக்குடி, திருநெல்வேலி |
| 20. | நிஷாபநதி | திருநெல்வேலி | | 20. | கிரிதாம்மாள் நதி | இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை. |
| 21. | கலிங்கலாறு | திருநெல்வேலி | | | | |
| 22. | சிந்தப்பள்ளி உப்போடை | விருதுநகர் | | | | |
| 23. | செங்கோட்டையாறு | விருதுநகர் | | | | |
| 24. | கவுன்டின்ய நதி | வேலூர் | | | | |
| 25. | பொய்னி | வேலூர் | | | | |

| | |
|---|---|
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன அமைப்புகள் அமைத்தல்<br>❖ பண்ணை இயந்திரமயாக்குதல்<br>❖ பண்ணைக்குட்டைகள் அமைத்தல்<br>❖ தகவல், கல்வி பரிமாற்றம் மற்றும் பயிற்சிகள் மூலம் திறமை வளர்த்தல் |

மானியங்களும் சலுகைகளும்

| | |
|---|---|
| சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் | மத்திய அரசு வழிமுறைக்குட்பட்டு 65% மானியம் |
| பண்ணை இயந்திரமயமாக்குதல் | 100% மானியம் – நீர் உபயோகிப்பாளர் சங்கங்களுக்கு |
| பண்ணைக்குட்டை | 95% மானியம் – தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு<br>90% மானியம் – இதர விவசாயிகளுக்கு |

| | |
|---|---|
| தகுதி | தேர்வு செய்யப்பட்ட உபவடிநிலப் பகுதிகளில் உள்ள அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர். |
| திட்ட செயலாக்கத்திற்கான கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். (இத்திட்டம் 2013ம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும்.) |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர் (வே.பொ.)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ.)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)<br>தலைமைப் பொறியாளர் ,<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை–600 035.<br>தொலைபேசி எண். 2435 2686, 2435 2622. |

**திட்ட எண் 12**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| நோக்கம் | 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த இனங்களில் 4% ஒருங்கிணைந்த வருடாந்திர வளர்ச்சியினை எய்திடுதல். |

செயல்படுத்தப்படும் பணிகள்

| திட்டம் | பணி விபரம் | செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|
| வேளாண்மை இயந்திர–மயமாக்குதல் | அ. பண்ணை இயந்திரங்கள் / கருவிகள், அதிகவிலையுள்ள வேளாண் பண்ணைக் கருவிகள் மற்றும் மனிதத் தோழமை வேளாண்மைக் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்.<br>ஆ. விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க, டிராக்டரால் இழுக்கக்கூடிய கருவிகளை வாங்குதல். | அனைத்து மாவட்டங்கள் |

மானியங்களும் சலுகைகளும்

**<u>வேளாண்மை இயந்திரமயமாக்குதல்</u>**

அ. விவசாயிகளுக்கு பண்ணைக் கருவிகள் வாங்க 50% மானியம் வழங்குதல். (ஒவ்வொரு கருவிக்கும் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பு தொகைக்குட்பட்டு)

ஆ. விவசாயிகளுக்கு அதிகவிலையுள்ள பண்ணை இயந்திரங்கள் / கருவிகள் வாங்க 50% மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.4.00 இலட்சம் வரை வழங்குதல்.

இ. விவசாயிகளுக்கு வேளாண் தோழமை கருவிகள் வாங்க 50% மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.5000/– வரை வழங்குதல்.

| | |
|---|---|
| தகுதி | அனைத்து விவசாயிகள். |
| திட்ட செயலாக்கத்திற்கான கால நிர்ணயம் | அரசாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ).<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ).<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)<br>தலைமைப் பொறியாளர் , வேளாண்மைப் பொறியியல் துறை, நந்தனம், சென்னை–600 035.<br>தொலைபேசி எண். 2435 2686, 2435 2622. |

**திட்ட எண் 13**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்** | **செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம். |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்களிலும்<br>(நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் சென்னை மாவட்டம் நீங்கலாக) |
| நோக்கம் | ❖ நிலத்தடி நீரை மேம்படுத்த மழைநீரை சேகரித்தல்.<br>❖ மண்வளத்தைக் காத்து மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்துதல் |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ செறிவூட்டு குழாய் கிணறுகளுடன் கூடிய கசிவு நீர் குட்டைகள் அமைத்தல்<br>❖ பெரிய, நடுத்தர, மற்றும் சிறிய தடுப்பணைகள் அமைத்தல்<br>❖ பண்ணைக்குட்டைகள் அமைத்தல்<br>❖ புதிய கிராம குளங்கள் / ஊரணிகள் அமைத்தல்<br>போன்ற மழைநீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| மானியங்களும், சலுகைகளும் | 100% மானியத்தில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| தகுதி | அதி நுகர்வு, அபாயகரமான மற்றும் மித பாதுகாப்பான ஒன்றியங்களில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. |
| திட்ட செயலாக்கத்திற்கான கால நிர்ணயம் | நிதியாண்டுக்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ).<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ).<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)<br>தலைமைப் பொறியாளர் ,<br>வேளாண்மைப் பொறியியல் துறை, நந்தனம், சென்னை–600 035.<br>தொலைபேசி எண். 2435 2686, 2435 2622. |

**திட்ட எண் 14**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **சிறுபாசனத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம். (திட்டம் சாராதது) |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்களிலும்<br>(நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக) |
| நோக்கம் | ❖ புவியியல் நில அளவை மூலம் புதிய திறந்த மற்றும் குழாய் கிணறுகள் அமைக்க இடம் தேர்வு செய்தல்.<br>❖ புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குவதன் மூலம் கூடுதல் நிலங்களில் சாகுபடி மேற்கொள்ளல்.<br>❖ தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப்படுத்துதல்.<br>❖ நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து நிலப்பரப்பு நீரையும் இணைத்து பாசனத்திற்கு உபயோகப்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ குழாய் கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகள் அமைத்திட தகுந்த இடங்களை தேர்ந்தெடுக்க ஆய்வு மேற்கொள்ளுதல்.<br>❖ மணற்பாங்கான இடங்களில் குழாய் கிணறு அமைத்தல்<br>❖ கடினப்பாறைப் பகுதியில் உபயோகமற்ற அல்லது வறண்டு போன திறந்த வெளி கிணறுகளில், வெடிவைத்து நேர் மற்றும் பக்கவாட்டு துளைகள் இட்டு மீண்டும் கிணற்றினை உபயோகிக்க தக்க வகையில் ஏற்பாடு செய்தல்.<br>❖ கடினப் பாறை பகுதியில் துளைக் கிணறு அமைத்தல் |
| சலுகைகள் | அரசு நிர்ணயித்த வாடகை விகிதங்கள்படி விவசாயிகளுக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டு மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. (கருவிகள் விபரம் மற்றும் வாடகை விகிதங்கள் கீழ்க்கண்டவாறு ) |
| தகுதி | அனைத்து விவசாயிகள். |
| கால நிர்ணயம் | முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)<br>தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண். 2435 2686, 2435 2622 |

**சிறுபாசன இயந்திரங்களின் வாடகை விபரம்**

**(வாடகை விபரம் ரூபாயில்)**

| வ. எண் | இயந்திரங்களின் பெயர் | அலகு | வேளாண்மைப் பணிகளுக்கு | வேளாண்மை அல்லாத பிற பணிகளுக்கு |
|---|---|---|---|---|
| 1. | பெர்குசன் துளைக் கருவி | நாள் | 300 | 600 |
| 2. | சுழற்விசைத் துளைக் கருவி 8" ( 200 மி.மி.) விட்டம் | மீட்டர் | 130 | 195 |
| 3. | பாறை தகர்க்கும் கருவி | ஒரு வெடிப்புக்கு | 250 | 500 |
| 4. | நீள் துளைக் கருவி | நாள் | 250 | 500 |
| 5. | கைத்துளைக் கருவி 8" (200 மி.மி. ) விட்டம் | மீட்டர் | 30 | 60 |
| 6. | சிறு விசைத் துளைக் கருவி 8" (150 மி.மி. ) விட்டம் | மீட்டர் | 70 | 140 |
| 7. | நில நீர் ஆய்வுக் கருவி | ஆய்வு | 500 | 1000 |
| 8. | மின்னியல் ஆய்வுக் கருவி | குழாய் கிணறு | 1000 | 2000 |

**திட்ட எண் 15**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **நில மேம்பாட்டுத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம். (திட்டம் சாராதது) |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்களிலும் |
| நோக்கம் | ❖ விவசாய நிலங்களில் நீர்ப்பாய்ச்சுதல் மற்றும் இதர விவசாய பணிகளை எளிதாகவும் திறமையாகவும் மேற்கொள்ளும் பொருட்டு நிலம் சமன்படுத்துதல் மற்றும் வடிவமைத்தல் போன்ற பணிகளை செயல்படுத்தி அதன் மூலம் விவசாயம் செய்வதற்கான நிலப்பரப்பை அதிகப்படுத்தி விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல்.<br>❖ விவசாயிகள் உரிய நேரத்தில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கூடுதல் பண்ணை சக்தியை உருவாக்குதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | ❖ நிலம் வடிவமைத்தல்<br>❖ நிலம் சமன் செய்தல்<br>❖ நிலச்சீரமைத்தல்<br>❖ உழுதல், பரம்படித்தல்<br>❖ நெல் கதிரறுக்கும் இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடை செய்தல் |
| சலுகைகள் | அரசு நிர்ணயித்த வாடகை விகிதங்கள் படி விவசாயிகளுக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டு மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற் கொள்ளப்படுகின்றன. (கருவிகள் விபரம் மற்றும் வாடகை விகிதங்கள் கீழ்க்கண்டவாறு ) |
| தகுதி | அனைத்து விவசாயிகள். |
| திட்ட செயலாக்கத் திற்கான கால நிர்ணயம் | முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. |
| அணுக வேண்டிய அலுவலர் | வருவாய்க்கோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர்.(வே.பொ)<br>மாவட்ட அளவில் உள்ள செயற் பொறியாளர் (வே.பொ)<br>மண்டல அளவில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)<br>தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை,<br>நந்தனம், சென்னை–600 035.தொலைபேசி எண். 2435 2686, 2435 2622 |

**நில மேம்பாட்டுக் கருவிகளின் வாடகை விபரம்**

| **வ. எண்** | **இயந்திரங்களின் பெயர்** | **வாடகை விபரம் (ரூபாய் ஒரு மணி நேரத்திற்கு) (எரிபொருள் சேர்த்து )** |
|---|---|---|
| 1. | மண்தள்ளும் இயந்திரம் ( புல்டோசர் ) | 700 |
| 2. | உழுவை (டிராக்டர்) | 275 |
| 3. | கதிர் அறுவடை இயந்திரம் ( ரப்பர் டிராக் வகை ) | 1185 |
| 4. | கதிர் அறுவடை இயந்திரம் ( Wheel Type ) | 795 |
| 5. | ஹைறட்ராலிக் எக்ஸ்கவேடர் (BE 71) | 615 |

குறிப்பு: இயந்திரங்களின் வாடகைத் தொகை டீசலின் சந்தை விலைக்கேற்ப மாறுதலுக்குட்பட்டது.

## 4. விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத்துறை

### விதைச்சான்றளிப்புத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

**திட்ட எண்.1**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் பெயர்** | : | **விதைச்சான்றளிப்பு** |
| திட்டத்தின் பயன்கள் | : | விதை உற்பத்தி கண்காணிக்கப்பட்டு தரமான விதைகளுக்கு சான்று செய்யப்படுகிறது. விதைச்சான்றுப்பணி கீழ்குறிப்பிட்ட வழிகளில் நிறைவு செய்யப்படுகிறது.<br><br>1. விதைச்சான்றுக்கு விண்ணப்பங்கள் ஏற்பு செய்தல்<br>2. விதை ஆதாரம் மற்றும் இதர தகுதிகள் ஆய்வு செய்தல்<br>3. வயல் ஆய்வுகள்<br>4. அறுவடைக்கு பிந்திய நிலையில் ஆய்வுகள்.<br>5. விதை மாதிரி எடுத்தலும் பகுப்பாய்வு செய்தலும்<br>6. தரமான விதைகளுக்கு சான்று செய்தல். |
| தகுதிகள் | : | விதைச்சான்று திட்டத்தில் சான்று விதை உற்பத்தி செய்ய விரும்பும் எவர் வேண்டுமானாலும் விதைச்சான்று துறையின் கீழ் பதிவு செய்து விதை உற்பத்தி செய்யலாம். பதிவுக் கட்டணமாக விண்ணப்பம் ஒன்றுக்கு ரு.25/–ம் உரிய வயலாய்வு மற்றும் பகுப்பாய்வு கட்டணமும் செலுத்த வேண்டும். விதைகள்சட்டம் 1966 பிரிவு 5 ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட விதை ரகங்களே சான்று செய்ய தகுதியானவை. |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | : | அந்தந்த பகுதி விதைச்சான்று உதவி இயக்குநர்கள். |
| ஏற்பு/மறுப்புக்கான காலக்கெடு | : | விண்ணப்பங்கள் ஏற்பு/மறுப்பு தொடர்பான விபரம் உரிய உற்பத்தியாளருக்கு 10 தினங்களில் தெரிவிக்கப்படும் |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | விதைச்சான்று இயக்குநர்,<br>1424ஏ, தடாகம் சாலை,<br>கோவை 641 013.<br>தொலைபேசி எண். 0422 2432984<br>தொலைவு அஞ்சல் 0422 2457554<br>மின்னஞ்சல் dsccbe@rediffmail.com.<br>இணைய தளம் www.seedtamilnadu.com |

**திட்ட எண்.2**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் பெயர்** | : | **விதை ஆய்வு** |
| திட்டத்தின் பயன்கள் | : | 1) விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.<br><br>2) விதை விற்பனை நிலையங்கள் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு தரம் ஆய்வு செய்யப்படுகிறது.<br><br>3) தரக்குறைவான விதை விநியோகம் தொடர்பான புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.<br><br>4) முறையற்ற விதை விநியோகிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| தகுதிகள் | : | விதை விற்பனை செய்ய விரும்பும் எவர் ஒருவரும் உரிய விதை ஆய்வு துணை இயக்குநரிடம் விதை விற்பனை உரிமம் பெற்று விதை விற்பனை செய்யலாம். புதிய விதை விற்பனை உரிமம் பெற கட்டணம் ரூ.50/—(மூன்று ஆண்டுகளுக்கு) விற்பனை உரிமம் புதுப்பிக்க கட்டணம் ரூ.20/—(மூன்று ஆண்டுகளுக்கு). |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | : | அந்தந்தப் பகுதி விதை ஆய்வு துணை இயக்குநர்கள். |
| ஏற்பு/மறுப்புக்கான காலக்கெடு | : | விதை விற்பனை உரிம விண்ணப்பங்கள் தொடர்பாக விபரம் 15 தினங்களுக்குள் தெரிவிக்கப்படும் |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | விதைச்சான்று இயக்குநர்,<br>1424ஏ, தடாகம் சாலை,<br>கோவை 641 013.<br>தொலைபேசி எண். 0422 2432984<br>தொலைவு அஞ்சல் 0422 2457554<br>மின்னஞ்சல் dsccbe@rediffmail.com.<br>இணைய தளம் www.seedtamilnadu.com |

**திட்ட எண்.3**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் பெயர்** | : | **விதைப் பரிசோதனை** |
| திட்டத்தின் பயன்கள் | : | விதைப்பகுப்பாய்வுக்கு அனுப்பப்படும் விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழ்குறிப்பிட்ட இனங்களின் மீது முடிவுகள் தெரிவிக்கப்படும்.<br><br>1. புறத்தூய்மை<br>2. முளைப்புத்திறன்<br>3. ஈரப்பதம்<br>4. விதை நலம்<br>5. பிற ரக கலப்பு |
| தகுதிகள் | : | விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய விரும்பும் எவர் ஒருவரும் விதை மாதிரிகளை அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பலாம்<br><br>பரிசோதனைக் கட்டணம் ஒரு விதை மாதிரிக்கு ரூ.30/– |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | : | அந்தந்தப் பகுதி விதைப் பரிசோதனை அலுவலர்கள். |
| ஏற்பு/மறுப்புக்கான காலக்கெடு | : | விதை மாதிரிகள் பெறப்பட்ட 30 தினங்களுக்குள் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்படும். |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | விதைச்சான்று இயக்குநர்,<br>1424ஏ, தடாகம் சாலை,<br>கோவை 641 013.<br>தொலைபேசி எண். 0422 2432984<br>தொலைவு அஞ்சல் 0422 2457554<br>மின்னஞ்சல் dsccbe@rediffmail.com.<br>இணைய தளம் www.seedtamilnadu.com |

**திட்ட எண்.4**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் பெயர்** | **:** | **விதை உற்பத்தி – விதைச்சான்று – விதைத் தரக்கட்டுப்பாடு – பயிற்சி.** |
| திட்டத்தின் பயன்கள் | : | சான்று விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் விதை தரக்கட்டுப்பாடு பணிகள் தொடர்பான கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.<br><br>1. அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி.<br><br>2. தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி.<br><br>3. விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி. |
| தகுதிகள் | : | சான்று விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் விதை தரக்கட்டுப்பாடு தொடர்பாக அளிக்கப்படும் பயிற்சிகளில் எவர் ஒருவரும் பங்கேற்கலாம். இப்பயிற்சிக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | : | அந்தந்த பகுதி விதைச்சான்று உதவி இயக்குநர்கள் மற்றும் விதை ஆய்வு துணை இயக்குநர்கள். |
| ஏற்பு/மறுப்புக்கான காலக்கெடு | : | முடிவுகள் 10 தினங்களுக்குள் தெரிவிக்கப்படும். |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | விதைச்சான்று இயக்குநர்,<br>1424ஏ, தடாகம் சாலை,<br>கோவை 641 013.<br>தொலைபேசி எண். 0422 2432984<br>தொலைவு அஞ்சல் 0422 2457554<br>மின்னஞ்சல் dsccbe@rediffmail.com.<br>இணைய தளம் www.seedtamilnadu.com |

**திட்ட எண்.5**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் பெயர்** | : | **அங்ககச் சான்றளிப்பு.** |
| திட்டத்தின் பயன்கள் | : | தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின்படி அங்ககச் சான்றளிப்பு வழங்கப்படுகிறது. அங்ககச் சான்றளிப்பு பணி கீழ்குறிப்பிட்ட வழிகளில் நிறைவு செய்யப்படுகிறது.<br><br>1.அங்ககச் சான்றுக்கு விண்ணப்பங்கள் ஏற்பு செய்தல்.<br>2. வயல் ஆய்வுகள்.<br>3. அறுவடைக்கு பிந்திய நிலையில் ஆய்வுகள்.<br>4. விதை மாதிரி எடுத்தலும் பகுப்பாய்வு செய்தலும்<br>5. தரமான விளை பொருளுக்கு சான்று செய்தல். |
| தகுதிகள் | : | அங்ககச்சான்று திட்டத்தில் அங்கக வேளாண் முறையில் உற்பத்தி செய்ய விரும்பும் எவர் வேண்டுமானாலும் அங்ககச் சான்று துறையின் கீழ் பதிவு செய்து உற்பத்தி செய்யலாம்<br>பதிவு கட்டணமாக சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ.500 இதர விவசாயிகளுக்கு ரூ.1000, ஆய்வு மற்றும் சான்றுக் கட்டணமாக ரு.1000, பயண கட்டணமாக ரூ.200 தனி நபர் பதிவிற்கு செலுத்த வேண்டும். குழுவாக பதிவு செய்வதற்கு பதிவுக் கட்டணமாக ரூ.5000, ஆய்வு மற்றும் சான்றுக் கட்டணமாக ரு.1000, பயணக் கட்டணமாக ரூ.200 செலுத்த வேண்டும். வணிக நிறுவனங்கள் பதிவு செய்யக்கட்டணமாக ரூ.5000 ஆய்வு மற்றும் சான்றுக் கட்டணமாக ரூ.2000, பயணக் கட்டணமாக ரூ.400 செலுத்த வேண்டும்.<br>அனைத்து வகை பயிர்களுக்கும் அங்ககச் சான்று வழங்கப்படும். |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | : | தர மேலாளர், அங்ககச் சான்றளிப்பு இயக்குநரகம், கோவை 641 013. |
| ஏற்பு/மறுப்புக்கான காலக்கெடு | : | விண்ணப்பங்கள் ஏற்பு/மறுப்பு தொடர்பான உரிய விபரம் உற்பத்தியாளருக்கு 10 தினங்களில் தெரிவிக்கப்படும். |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | விதைச்சான்று இயக்குநர்,<br>1424ஏ, தடாகம் சாலை,<br>கோவை 641 013.<br>தொலைபேசி எண். 0422 2435080<br>தொலைவு அஞ்சல் 0422 2457554<br>மின்னஞ்சல் tnocd@yahoo.co.in.<br>இணைய தளம் www.tnocd.org |

**படிவம் – 1**
**விதைப்பண்ணை பதிவு படிவம்**

| | | |
|---|---|---|
| 1 | உற்பத்தியாளர் பெயர் முகவரி | |
| 2 | சாகுபடியாளர் பெயர் முகவரி | |
| 3 | விதைப் பண்ணை அமைவிடம் | |
| | அ. கிராமம் | |
| | ஆ. வட்டம் | |
| | இ. தாலுகா | |
| 4 | பயிர்/இரகம்/பரப்பு (ஆண்/பெண் பயிர் பரப்பு வீரிய ஒட்டு இரகங்களில் குறிப்பிட வேண்டும்). | |
| 5 | உற்பத்தி நிலை | |
| 6 | உபயோகித்த விதை அளவு (கிலோ/ஏக்கர்) வீரிய ஒட்டு இரகங்களில் ஆண்/பெண் விதையளவு குறிப்பிட வேண்டும். | |
| 7 | விதை ஆதாரம்<br>சான்றட்டை எண்.கொள்முதல் ரசீது எண்.தேதி | ஆண் பெண் |
| 8 | விதைப்பு தேதி<br>(வீரிய ஒட்டு இரகங்களில் ஆண்/பெண் தேதி தனித்தனியே குறிப்பிட வேண்டும்). | |
| | சாகுபடியாளர் கையொப்பம் | உற்பத்தியாளர் கையொப்பம் |
| | இணைப்பு விதை ஆதார சான்றட்டைகள்<br>கொள்முதல் ரசீது விபரம். | |
| | | |

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

1. கட்டணம் செலுத்திய விபரம்
2. இரசீது எண்.தேதி
3. விதைச்சான்று எண்.
4. ஒதுக்கீடு செய்யப்பட்ட விதைச்சான்று அலுவலர்.
5. வயலாய்வு தேதி விபரம்.

## விதைச்சான்றளிப்பு கட்டணங்கள்

| வ.எண். | விபரங்கள் | கட்டண விபரம். |
|---|---|---|
| I | பதிவு கட்டணங்கள் – விதைச்சான்று திட்டத்தில் பதிவு செய்ய பதிவு கட்டணம் | ரூ.25/ விண்ணப்பம் |
| II | 1. வெள்ளை நிற சான்றட்டை கட்டணம்<br>2. நீல நிற சான்றட்டை கட்டணம் | ரூ.3/ சான்றட்டை + வரி.<br>ரூ.2/ சான்றட்டை + வரி. |
| III | விதைச்சான்றளிப்பு/வயலாய்வு கட்டணங்கள் | |
| 1 | இரக நெல் | ரூ.60/ 0.40 எக்டருக்கு |
| 2 | வீரிய நெல் | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 3 | பிற இரக சிறு தானியங்கள் | ரூ.80/0.40 எக்டருக்கு |
| 4 | பிற இரக வீரிய சிறுதானியங்கள் | ரூ.150/ 0.40 எக்டருக்கு |
| 5 | இரக மக்காச்சோளம் | ரூ.70/ 0.40 எக்டருக்கு |
| 6 | தாயாதி இரகங்கள் மற்றும் வீரிய மக்காச்சோளம் | ரூ.140/ 0.40 எக்டருக்கு |
| 7 | இரக சோளம், இரக கம்பு, இரக ராகி | ரூ.60/ 0.40 எக்டருக்கு |
| 8 | வீரிய சோளம், வீரிய கம்பு | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 9 | பிற இரக சிறதானியங்கள் | ரூ.60/ 0.40 எக்டருக்கு |
| 10 | பிற இரக வீரிய சிறதானியங்கள். | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 11 | உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொண்டக்கடலை, இரக துவரை, மாத் பீன்ஸ், கேசரி, லெண்டில் மற்றும் பிற இரக பயறுவகைகள். | ரூ.50/ 0.40 எக்டருக்கு |
| 12 | அவரை, பட்டாணி | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 13 | வீரிய துவரை | ரூ.180/ 0.40 எக்டருக்கு |
| 14 | பிற இரக வீரிய பயறுவகைகள் | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 15 | நிலக்கடலை, எள், இரக சூரியகாந்தி | ரூ.50/ 0.40 எக்டருக்கு |
| 16 | வீரிய சூரியகாந்தி | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 17 | இரக ஆமணக்கு | ரூ.50/ 0.40 எக்டருக்கு |
| 18 | வீரிய ஆமணக்கு | ரூ180/ 0.40 எக்டருக்கு |
| 19 | பிற இரக எண்ணெய்வித்துக்கள் | ரூ.50/ 0.40 எக்டருக்கு |
| 20 | பிற இரக வீரிய எண்ணெய்வித்துக்கள் | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 21 | இரக பருத்தி | ரூ.80/ 0.40 எக்டருக்கு |
| 22 | வீரிய பருத்தி | ரூ.250/ 0.40 எக்டருக்கு |
| 23 | சணல் | ரூ.60/ 0.40 எக்டருக்கு |
| 24 | இரக தக்காளி, இரக கத்தரி, இரக வெண்டை, மிளகாய், குடை மிளகாய், கீரை ஆஸ்பராகஸ், செலரி, வெந்தயம், லெட்டூஸ், பார்ஸ்லி, ஸிபினச், ஸிபினச் பீட், கொடி இரக காய்கறிகள் மற்றும் பிற இரக காய்கறிகள். | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 25 | முட்டைகோஸ், காளிபிளவர், சீன முட்டைகோஸ், நூல்கோல், பூண்டு, சிறிய வெங்காயம், இரக வெங்காயம், கேரட், செலரியாக், கார்டன் பீட், சுகர் பீட், முள்ளங்கி, சக்கரைவள்ளி கிழங்கு, மரவள்ளி, சேனை, உருளைக்கிழங்கு மற்றும் டர்னீப். | ரூ.150/ 0.40 எக்டருக்கு |
| 26 | வீரிய தக்காளி, வீரிய கத்தரி, வீரிய வெண்டை, வீரிய வெங்காயம் மற்றும் பிற வீரிய காய்கறி இரகங்கள் | ரூ.250/ 0.40 எக்டருக்கு |

| வ.எண். | விபரங்கள் | கட்டண விபரம். |
|---|---|---|
| 27 | வீரிய காரட், முள்ளங்கி (தாயாதி) வீரிய முள்ளங்கி, டர்னிப் தாயாதி, வீரிய டர்னிப் மற்றும் வீரிய உருளைக்கிழங்கு | ரூ.300/ 0.40 எக்டருக்கு |
| 28 | அனைத்து தீவனப்பயிர்கள் (கொத்தவரை, சோளம் தவிர) | ரூ.60/ 0.40 எக்டருக்கு |
| 29 | கொத்தவரை மற்றும் பிரெஞ்சு பீன்ஸ் | ரூ.130/ 0.40 எக்டருக்கு |
| 30 | மேற்கண்ட பிரிவுகளின் கீழ் வராத பயிர் இரகங்கள் | ரூ.150/ 0.40 எக்டருக்கு |
| 31 | மேற்கண்ட பிரிவுகளின் கீழ் வராத வீரிய பயிர் இரகங்கள் | ரூ.300/ 0.40 எக்டருக்கு |
| IV | இனத்தூய்மை பரிசோதனை கட்டணங்கள் | ரூ.300/ மாதிரி ஒன்றுக்கு |
| V | விதை பகுப்பாய்வு கட்டணங்கள் | ரூ.30/ மாதிரி ஒன்றுக்கு |
| VI | விதை வயல் மறு ஆய்வு கட்டணம் | வயலாய்வு கட்டணத்தின் 75 சதம். |
| VII | அனைத்து இரக பயிர்களுக்கும் சுத்திகரிப்பு மேற்பார்வை கட்டணம் | ரூ.25 / குவிண்டால். |
| VIII 1 | தானிய வகைகள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், மற்றும் கட்டண விபரம் குறிப்பிடப்படாத பிற இரக பயிர்களுக்கான மறு சிப்பமிடல் மற்றும் மேற்பார்வை கட்டணம். | ரூ.25 / குவிண்டால். |
| 2 | இரக பருத்தி, வீரிய பருத்தி, கொத்தவரை, பிரெஞ்சு பீன்ஸ் மற்றும் காய்கறிகளுக்கு மறு சிப்பமிடல் மற்றும் மேற்பார்வை கட்டணம். | ரூ.50 / குவிண்டால். |
| IX 1 | தானிய வகைகள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் கட்டண விபரம் குறிப்பிடப்படாத பிற இரக பயிர்களுக்கான மறு சுத்தியின்றி நேரடி திறனாய்வு கட்டணம். | ரூ.30 / குவிண்டால். |
| 2 | இரக பருத்தி, வீரிய பருத்தி, கொத்தவரை, பிரஞ்சு பீன்ஸ் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றிக்ான மறு சுத்தியின்றி திறனாய்வு கட்டணம். | ரூ.50 / குவிண்டால். |
| 3 | தானிய வகைகள், சிறு தானியங்கள், பயறு வகைகள், மற்றும் குறிப்பிடப்படாத பிற இரக பயிர்களுக்கான மறு சுத்தி/ மேற்பார்வையுடன் திறனாய்வு கட்டணம். | ரூ.40 / குவிண்டால். |
| 4 | இரக பருத்தி, வீரிய பருத்தி, கொத்தவரை, பிரெஞ்சு பீன்ஸ் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றிற்கான மறு சுத்தி/ மேற்பார்வையுடன் திறனாய்வு கட்டணம். | ரூ.60 / குவிண்டால். |
| 5 | தானிய வகைகள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், மற்றும் கட்டண விபரம் குறிப்பிடப்படாத பிற இரக பயிர்களுக்கான மறு சுத்தியின்றி திறனாய்வு கட்டணம். | ரூ.50 / குவிண்டால். |
| 6 | இரக பருத்தி, வீரிய பருத்தி, கொத்தவரை, பிரெஞ்சு பீன்ஸ் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றிற்கான மறு சுத்தியின்றி திறனாய்வு கட்டணம். | ரூ.80 / குவிண்டால். |
| 7 | தானிய வகைகள், சிறு தானியங்கள், பயறு வகைகள், மற்றும் குறிப்பிடப்படாத பிற இரக பயிர்களுக்கான மறு சுத்தி/ மேற்பார்வையுடன் திறனாய்வு கட்டணம். | ரூ.70 / குவிண்டால். |

| வ.எண். | விபரங்கள் | கட்டண விபரம். |
|---|---|---|
| 8 | இரக பருத்தி, வீரிய பருத்தி, கொத்தவரை, பிரெஞ்சு பீன்ஸ் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றிற்கான மறு சுத்தி/ மேற்பார்வையுடன் திறனாய்வு கட்டணம். | ரூ.100 / குவிண்டால் |
| X | புதிய சுத்தி நிலைய உரிமம் பெற அங்கீகாரம் கட்டணம் | ரூ.2000/ 3 ஆண்டுகளுக்கு |
| XI | சுத்தி நிலைய உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் கட்டணம் | ரூ.1000/ 3 ஆண்டுகளுக்கு |
| XII | சுத்தி நிலைய உரிமம் புதுப்பிக்க காலக்கெடு முடிந்து ஒரு மாதம் வரை விண்ணப்பிக்க அபராத தொகை | ரூ.250/ சுத்தி நிலையம் |
| XIII | சுத்தி நிலைய உரிமத்தில் மாறுதல் செய்ய கட்டணம் | ரூ.100/ சுத்தி நிலையம் |
| XIV | சுத்தி நிலைய உரிமம் உண்மை நகல் பெற கட்டணம் | ரூ.100/ சுத்தி நிலையம் |
| XV | புதிய விதை விற்பனை நிலைய உரிம கட்டணம் | ரூ.50 |
| XIV | விதை விற்பனை நிலைய உரிமம் புதுப்பித்தல் ட்டணம் | ரூ.20 |
| XVII | காலக்கெடு முடிந்து விதை விற்பனை நிலைய உரிமம் புதுப்பிக்க அபராத கட்டணம். | ரூ.25 |
| XVIII | விதை விற்பனை நிலைய உரிமத்தில் மாறுதல் செய்ய கட்டணம் | ரூ.10 |
| XIX | விதைச்சட்டம் 1966 ன் கீழ் மேல் முறையீட்டு கட்டணம். | ரூ.100 |
| XX | விதை கட்டுப்பாட்டு ஆணை 1983 ன் கீழ் மேல் முறையீட்டு கட்டணம் | ரூ.50 |
| XXI | சாகுபடியாளர்/ ஒருங்கிணைப்பாளர் பெயர்களில் உற்பத்தியாளர் பெயர் மாறுதல் செய்து சான்று பணி தொடர கட்டணம். | ரூ.50/ ஒரு வி.சா.எண்ணுக்கு |
| XXII | விதைச்சான்றுப் பணியில் வயல் மட்ட விதைகளை கொள்முதல் செய்தல், சுத்திகரிப்பு பணி மற்றும் சான்றட்டை இடுதல் ஆகியவற்றில் காலக்கெடு முடிந்து சிறப்பு அனுமதி பெற கட்டணம். | ரூ.50/ ஒரு வி.சா.எண்ணுக்கு |

## 5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

### வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

**திட்டம் 1 : உழவர் சந்தைகள்**

**பயன்கள்**

தமிழ்நாட்டில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் நகர்ப் பகுதிகளில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்சமயம் மாநிலம் முழுவதுமாக மொத்தம் **151** உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இச்சந்தைகள் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உறுதி செய்யப்படுவதுடன், நுகர்வோருக்கு வெளிச்சந்தையைக் காட்டிலும் குறைவான விலையில் பண்ணையிலிருந்து நேரடியாக புதிய விளைபொருட்கள் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**தகுதி**

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினரால் அடையாள அட்டை பெற்ற, காய்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடும் விவசாயிகள்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

மாவட்ட ஆட்சியர்கள் / வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண்வணிகம்)/ செயலாளர், விற்பனைக்குழு/ வேளாண்மை அலுவலர் (உழவர் சந்தை).

**ஒப்பளிப்பு/ நிராகரிப்பு கால அளவு**

காலவரையறை ஏதுமில்லை

**மேல்முறையீட்டு அதிகாரி**

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சிப்பெட் ரோடு, திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை 600 032.
தொலைபேசி எண்: 044–22253885/22253884.
நிகரி எண்: 044–22252754.

**திட்டம் 2:**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு உடனடி பணம் வழங்குதல்**

**<u>பயன்கள்</u>**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மிக முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பெற்றுத் தருவதே ஆகும். விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வியாபாரிகள் கோரிய விலைக்கு விற்றிட இசைவு தெரிவித்தவுடன் அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூட பொறுப்பாளர், விவசாயிகளிடமிருந்து வாங்கிய விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலிருந்து வியாபாரிகள் வெளியே கொண்டு செல்வதற்கு முன் விவசாயிகளுக்கு உடன் பணம் பட்டுவாடா செய்வதை உறுதி செய்கின்றனர்.

**<u>தகுதி</u>**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகள்.

**<u>தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்</u>**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர்.

**<u>ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு</u>**

விளைபொருள் விற்பனை செய்த நாள்.

**<u>மேல்முறையீட்டு அதிகாரி</u>**

செயலாளர், விற்பனைக்குழு.

**திட்டம் 3: விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன்**

**பயன்கள்**

அறுவடைக்காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால் சிறு / குறு விவசாயிகள் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பனை செய்வதை தவிர்க்கும் பொருட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் கட்டணம் ஏதுமின்றி 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை அதிகபட்சமாக ரூ.1,00,000/– பொருளீட்டுக் கடன் பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. 15 நாட்களுக்குப் பிறகு 5 விழுக்காடு வட்டி வசூலிக்கப்படுகிறது.

**தகுதி**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகள்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர்.

**ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு**

ஒரு வார காலம்.

**மேல்முறையீட்டு அதிகாரி**

செயலாளர், விற்பனைக்குழு.

**திட்டம் 4: வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன்**

**பயன்கள்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டும், விவசாயிகளுக்கு உடனடி பணப்பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்ற நோக்கிலும், அனைத்து ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களிலும் வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாங்கி இருப்பு வைக்கப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அல்லது, ரூ.1,00,000 இதில் எது குறைவோ அது பொருளீட்டுக்கடனாக வழங்கப்படுகிறது. வியாபாரிகள் அதிகபட்சமாக 3 மாதம் வரை கொள்முதல் செய்த விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைக்கலாம். இதற்காக 9 விழுக்காடு வட்டி வசூலிக்கப்படுகிறது.

**தகுதி**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் உரிமம் பெற்ற அனைத்து வியாபாரிகள்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர்.

**ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு**

ஒரு வார காலம்.

**மேல்முறையீட்டு அதிகாரி**

செயலாளர், விற்பனைக்குழு.

**திட்டம் 5: தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டம்**

**பயன்கள்**

இத்திட்டத்தின்படி, ஆண்டுதோறும் 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ / நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது பாம்பு கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ ரூ.1,00,000/– வரை உதவித் தொகை வழங்கப்படும். அதேபோன்று, விபத்தின் காரணமாக இரண்டு கைகள் / கால்கள் / கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000/– உதவித் தொகையும், விபத்தின் காரணமாக ஒரு கை / கால் / கண் அல்லது நிரந்தரமாக இடுப்பு செயல்பாடு இழக்க நேரிட்டால் ரூ.50,000/– உதவித்தொகையும் தகுதியுடைய விவசாயிகள்/குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், ஒருவருக்கு வருடத்திற்குரிய கட்டணமான ரூ.10/–ஐ சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் பங்களிப்பாகச் செலுத்துகின்றன.

**தகுதி**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக ஒரு வருடத்தில் ஒரு மெட்ரிக் டன் அல்லது அதற்கு கூடுதலாக விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகள்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர்.

**ஒப்பளிப்பு / நிராகரிப்பு கால அளவு**

விபத்து / மரணம் நேரிட்ட மூன்று மாத காலத்திற்குள்ளாக தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்திற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மேல்முறையீட்டு அதிகாரி**

தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம், சென்னை–32.

**திட்டம் 6 : அக்மார்க் தரம் பிரிப்பு**

**பயன்கள்**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் **30** மாநில அக்மார்க் ஆய்வகங்களும் சென்னையில் ஒரு முதன்மை ஆய்வகமும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம்பிரிப்பின் கீழ் மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவு பண்டங்களுக்கும், மையத்தொகுப்பிற்கு உட்படாத உணவு பண்டங்களுக்கும் தரம்பிரிப்பு பணி மேற்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு அக்மார்க் முத்திரை சீட்டுகள், உணவுப் பண்டங்களின் தரம் மற்றும் தன்மையின் அடிப்படையில் வழங்கப்பட்டு ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் சிப்பமிடப்படுகிறது. அக்மார்க் முத்திரை கலப்படமற்ற, தரமான, சரியான எடை கொண்ட உணவுப் பொருட்களுக்கு அரசு அளிக்கும் உத்தரவாதமாகும்.

**தகுதி**

அக்மார்க் அதிகார சான்றிதழ் பெற்ற உணவு பொருட்களை சிப்பம் கட்டுபவர்கள்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

வேளாண்மை அலுவலர், மாநில அக்மார்க் ஆய்வகம்

**ஒப்பளிப்பு/ நிராகரிப்பு கால அளவு**

**15** நாட்கள்

**மேல்முறையீட்டு அதிகாரி**

வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்).

**திட்டம் 7: தமிழ்நாடு நீர்வள நில வளத்திட்டம்**

**பயன்கள்**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, உபநீர் வடிநில பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள், தங்களின் வேளாண் விளைபொருள்களுக்கு கூடுதல் விலை பெறும் பொருட்டு வணிகச் செய்தி மற்றும் தகவல்களின் வாயிலாக விவசாயிகளின் சந்தை முனைப்புத் திறனை ஒருமுகப்படுத்துதல் ஆகும். மேலும் உபவடிநில விவசாயிகளின் சந்தை பயன்பாட்டிற்காக உலர் களங்கள், சேமிப்பு கிட்டங்கிகள், வேளாண் வணிக மையங்கள் மற்றும் கொள்முதல் மையங்கள் ஆகிய கட்டுமானங்களும், ஈரப்பதமானி, எடையிடும் கருவிகள் ஆகிய தளவாடச்சாமான்களும் வழங்கப்படுகின்றன.

**தகுதி**

உபநீர் வடிநிலப்பகுதி நீர் உபயோகிப்போர் சங்கத்தில் அல்லது விளைபொருள் குழுவின் உறுப்பினர்கள்

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்).

**ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு**

காலவரையறை ஏதுமில்லை

**மேல்முறையீட்டு அதிகாரி**

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சிப்பெட் ரோடு, திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை 600 032.
தொலைபேசி எண்: 044–22253885/22253884.
நிகரி எண்: 044–22252754

**திட்டம் 8: சிப்பம் கட்டும் கூடம் அமைப்பதற்கு வங்கி கடனுடன் கூடிய மானியம்.**

**<u>பயன்கள்</u>**

வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களான காய் மற்றும் கனிகளில் அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதாரத்தை தவிர்க்க சேகரித்து, சுத்தம் செய்து, தரம் பிரித்து, சிப்பம் கட்டுவதற்கு ஏதுவாக விளைநிலத்திற்கு அருகாமையில் சிப்பம் கட்டும் கூடம் அமைப்பதற்கு இம்மானியம் வழங்கப்படுகிறது. திட்ட செலவினத்தில் 25 விழுக்காடு அல்லது ரூ.62,500/– இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இம்மானியத் தொகை சிப்பம் கட்டும் கூடம் அமைக்க கடன் வழங்கும் வங்கி மூலம் நேரிடையாக சம்மந்தப்பட்ட விவசாயிக்கு வழங்கப்படும். இத்திட்டம் தேசிய தோட்டக்கலை குழுமத்தின் கீழ் தற்சமயம் 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**<u>தகுதி</u>**

வேளாண் உற்பத்தி / உபபொருள் உற்பத்தி செய்யும் அமைப்புகள், விவசாயிகள் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்புரிவோர்கள் .

**<u>தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்</u>**

வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்).

**<u>ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு</u>**

வங்கியிடம் இருந்து கடன் வழங்க ஒப்புதல், மாவட்டக்குழுவின் ஒப்புதல் மற்றும் முடிவறிக்கை சமர்ப்பித்த மூன்று மாத காலத்திற்குள்ளாக.

**<u>மேல்முறையீட்டு அதிகாரி</u>**

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சிப்பெட் ரோடு, திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை 600 032.
தொலைபேசி எண்: 044–22253885/22253884.
நிகரி எண்: 044–22252754

**திட்டம் 9: தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு**

**பயன்கள்**

